ஆசிரியர்: மு. கருணாநிதி

2 அணா

முரசு 1 | சென்னை | 24 — 9 — 54 | வெள்ளி | ஒலி 26

# பழுதூரா நம்து திராவிடம்?
# தொழுதுகிடப்பதா நம்வாழ்வு?

செங்கதிர் எழுமுன்னே எழுந்து — சிங்காரத் தோட்டத்துள் புகுந்து, ரீங்காரம்பாடி தேன் சேர்த்து மகிழும் வண்டினம்! பின்பொருநாள் தேனீக்கள் தேக்கி வைத்திருக்கும் அமுதத் துளிகளை; சுவையின் சேர்க்கையை தோட்டக்காரன் திருடி விடுவான்; முடவனும் ஆசைப் படும் கொம்புத்தேன் என்று பெயர் சொல்லி சந்தையிலே விலைகூறுவான். பூ விரித்த சோலையிலே மதுக்கலயத்தை பறிகொடுத்து வாடும் ஈக்களின் நிலையிலேதான் —காவிரியின் தென்பாங்கினர் மரவுரிதரித்து மற்றவர் வாழ்ந்திட்ட போது நாகரிகத்தின் உச்சாணிக்கிளையிலே நின்று ஊஞ்சல் பழகிய திராவிடரின் நிலையும் அமைந்திருக்கிறது.

புயலால் வாடி, பஞ்சத்தால் நாடி தளர்ந்து, வாடி வதங்கிய போதும் தென்னகம் இந்திய அரசினர் கடன் என்று கைவிரித்தால், அள்ளிக் கொடுக்கத் தயங்கியதில்லை. டெல்லி அரசாங்கத்திற்கு வரி கொடுக்கிறோம்; கப்பம் கட்டுவதைப் போல! வானம் பொழியுது; பூமி விளையுது; மன்னவன் காணிக்கை ஏதுக்கடா என்று வீரக் குரல் முழக்கி வாழ்ந்தவர்களின் வாரிசுதான் இப்போது முடங்கிக் கிடக்கிறது, வணங்கிப் பணிகிறது.

கடலுக்கு அடியிலே காட்சி தரும் முத்துப் படுக்கையும் — பூமிக்கு அடியிலே புதைந்து கிடக்கும் தங்க ரேக்குகளும் நம்மை வளப்படுத்த காத்து நிற்கின்றன; ஆனால் என்ன காரணத்தாலோ நம்மை ஆளும் டெல்லி நாயகர்கள் நம்மை வாழ்விக்க விரும்புவதில்லை; திசைமாறி ஓடும் பக்ராநங்கல் கணவாயும், வடக்கத்தியரை வாழவைக்கும் வேறுபல திட்டங்களும்தான் நம்மை அடிமை கொண்டவர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. வடக்கு தழைப்பானேன்; தெற்கு மட்டும் தாழ்வானேன் என்று நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். அந்தக் கேளாக் காதினர்கள் — கதராடை தரித்த கோமான்கள் நம் கூக்குரலை செவிமடுத்ததாகவே தெரியவில்லை.

தீனக்குரல் எழுப்பும் தென்புலத்தை வெறுத் தொதுக்கி, தன் சொந்த பூமியிலே செல்வமழை பொழிவிக்க நேரு சர்க்காருக்கு மீண்டுமொரு நல் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இத்தனை நாட்களும் உலக நிகழ்ச்சிகளில் ஒதுங்கி நின்று, ரகசியப் பங்கேற்ற ரஷ்யா இப்போது இந்தியாவில் இரும்பாலை ஒன்று அமைப்பதில் தாராள உதவி வழங்க முன்வந்திருக்கிறது. நிபுணர்களை அனுப்பி வைப்பதோடு மட்டுமல்லாமல், ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் போல ரஷ்யா ஆலையின் நிர்வாகத்திலே பங்கு கேட்கவில்லை. மாறாக, உலக பாங்கியும் அமெரிக்காவும் கேட்கும் வட்டித் தொகையில் பாதி கொடுத்தாலே போதும்; முதலீடு செய்கிறேன் என்று மாஸ்கோ அறிவித்திருக்கிறது. முதலாளித்துவ நாடுகளுக்கெல்லாம் மிரட்சியளிக்கும் இந்தச் செய்தி நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது இருந்தாலும் நாம் இந்த மகிழ்ச்சியிலே முழுப் பங்குபெற முடியவில்லை. ரஷ்யா நீட்டும் நேசக்கரம், விந்தியத்திற்கு அப்பாலேயே தடுத்து நிறுத்தப் பட்டு விட்டால், நாம் எப்படி களிகூற முடியும்?

வடக்கே இரும்பாலைகளுக்கு பஞ்சமில்லை. ஏற்கனவேயே; பிரசித்திபெற்ற டாட்டாவின் தொழிற்சாலை அங்குதான் அமைந்திருக்கிறது. அது மட்டுமின்றி இந்தியா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனியும் வடக்கே இருந்துதான் வளம் பொழிந்து கொண்டிருக்கிறது. ஜெர்மன் முதலாளிகளின் பரிபூரண உதவியோடு இன்னுமொரு இரும்பாலை அமைக்க திட்டமிடப் பட்டிருக்கிறது. வடநாட்டை ஆலை அரசாக்கும் பேராசை இதோடா நின்றுவிடும்? ரஷ்யாவின் உதவியால் பிரம்மாண்டமான இரும்பாலை அமைக்க மோதிலால் மைந்தரின் ஆட்சி முஸ்தீப்புகள் செய்தாலும் அதற்கு ரஷ்யா பணிந்தாலும் நாம் ஆச்சரியப் படுவதற் கில்லை.

சேலத்து சேர்வராயன் மலை, தன் வயிற்றிலே வைத்திருக்கும் இரும்பு தாதுவை வாரிவழங்கக் காத்திருக்கிறது, அதற்குப் பக்கத்திலே நெய்வேலியும் இருக்கிறது, இரும்பாலை இயங்குவதற்குப் போதுமான நிலக்கரி அளிக்க! இந்திய அரசினருக்கு மனமிருந்தால்—காங்கிரஸ் போர்வை அணிவதிலே பெருமை கொள்ளும் காமராஜர்ஆட்சிக்கு வாதாடும் திறனிருந்தால் சேலத்து இரும்பையும் நெய்வேலி நிலக்கரியையும் இணைத்து ரஷ்ய உதவியால், திராவிடத்தை செல்வபூமியாக்கலாம். திராவிடத்திலுள்ள நிலக்கரி சுரங்கத்திலேயே வட நாட்டாரைக் கொண்டுபோய் சேர்த்து விட்டோம்; வட சீமையில் வளம் கொழிப்பதைத் தடுக்க இவர்களால் என்ன செய்து விட முடியும் என்று டில்லிபீடம் மனப்பால் குடித்தாலோ, அல்லது திராவிடத்தை மீண்டும் பழுதூராக்கும் திருப்பணியில் முனைந்தாலோ திராவிடம் நிச்சயம் நிலை கொள்ளாது; தொழுது வணங்கி நிற்கும் நிலையை மாற்றி அமைத்தே தீரும்!

வெளிவந்து விட்டது!

மு. கருணாநிதி தீட்டிய

**அம்மையப்பன்**

[ கதை வசனப் பாடல்களுடன் ]

✻

உரிமை பதிவு செய்யப்பட்டது.

அழகான முகப்புடன் விலை எட்டணா

கழிவு 40 சத விகிதம்.

— வெளியீடு —

**முரசொலி பதிப்பகம்**

சென்னை-14,

# விம்முகிறார்கள் : : விலாசம் தெரியவில்லை!

"வணக்கம், பெரியவரே"

செல்லப்பா, சென்னை பட்டணத்தையே, மறந்துவிட்டாய் போலிருக்கே! படித்துக் கொண்டிருக்கும் போதெல்லாம், வாரம் இரண்டுமுறை வருவாயே, ஊருக்குப் போனதும் எங்களையெல்லாம் அடியோடு மறந்துவிட்டாயா என்ன?"

"மன்னிக்க வேண்டும். ஓய்வில்லை! உங்களுக்குத்தான் தெரியுமே, வன்னியர்களுக்கும் அரசியலுக்கும் தொடர்பு எப்படி? அதனால் வளரும் தொல்லைகள் எவ்வளவு என்றெல்லாம். மக்களெல்லாம் மிரண்டு போயிருக்கிறார்கள். நான்கூட இப்போது பொதுவாழ்வைத்தான் பெரிதும் விரும்புகிறேன்."

"ஆபத்தானதாயிற்றே தம்பி! நேர்மை வேண்டும், நெஞ்சுரம் வேண்டும், சகிப்புத்தன்மையோ மிக முக்கியம்! உனக்கேன் இதெல்லாம்"

"அப்படித்தான் நான்கூட முதலில் நினைத்தேன்—படிக்கும் போது. மனம் நாம் சொல்லுகிறபடியா கேட்கிறது! ஏதோ ஒரு சக்தி என்னை அறியாமல் அரசியல் உலகிற்கு இட்டுச் சென்று விட்டது. பாருங்களேன், ராமசாமிப் படையாச்சி இருக்கிறாரே..."

"அவருக்கென்ன? அவர்தான் வன்னிய சமூகத்திற்கென்றே நான பிறந்தேன்-அவர்கள் வாழ்வு-என் வாழ்வு என்று எண்ணுகிறவராயிற்றே-போதாதற்கு அவர் மாவட்டத்திலே நிலக்கரிச் சுரங்கம் வேறு. கேட்கவா வேண்டும் தென்னார்க்காடு மாவட்டத்திலே செல்வம் கொழிப்பதற்கு!"

"இம்! தூரத்துப் பச்சை கண்ணுக்கு அழகுதான் பெரியவரே. கரி வலம் போனாலென்ன இடம் போனாலென்ன ஆளைக் கடிக்காமல் போனால் போதும் என்று தமிழிலே ஒரு முதுமொழி உண்டே, அந்த நிலைதான் எங்களுக்கு. வன்னியரின் வாழ்வுசாக்க வந்த படையாச்சி வாழ்வளிக்காவிட்டாலும் வயிற்றிலடிக்காது இருந்தால்போதும் என்றாகிவிட்டது."

"அப்படியா! என்ன அப்படிச் செய்துவிட்டார். பிரச்சாரம் செய்கிறார்-புயல் வேகத்தில்! மின்வேகச் சுற்றுப் பயணம்! தென்னார்க்காடு முழுதும் அவருக்கு வரவேற்பு! ஆனால் நீ சொல்லுகிறாய் அவர் மக்கள் நலம் பேணவில்லையென்று. நம்ப முடியவில்லை தம்பி."

"கஷ்டப்பட்டு சம்பாதித்த நிலத்தை, உங்களிடமிருந்து அதிகாரத்தோடு இன்னொருவனுக்கு வாங்கிக் கொடுத்து— அதை அவன் தரிசாகப் போட்டு வைத்தால் உங்கள் மனம் பற்றியெரியாதா பெரியவரே, நீங்களே சொல்லுங்கள். வீடுவாசல் மறந்து, காடே கதியென்று கிடந்தோமே, வெயிலில் சருகாகக் காய்ந்த சரீரம், வியர்வையை கண்ணீராக்கியல்லவா கொட்டியது என்று எண்ணி வேதனைப்படமாட்டீர்களா, அந்த நிலம் பாழாகக் கிடப்பதைப் பார்த்து."

"இருக்காதா தம்பி, கஷ்டப்பட்டவன் நெஞ்சு எரியத்தான் செய்யும். ஆமாம், எதற்கு இந்த உதாரணங்களெல்லாம்! சொல்லு தம்பி"

"உதாரணம் காட்டவில்லை பெரியவரே, உள்ளதைச் சொல்லுகிறேன். ராமசாமிப் படையாச்சி அதைச் செய்துவிடுவார், இதைச் செய்து விடுவார் என்றெல்லாம் சொன்னீர்களே, அதற்காகச் சொன்னேன்."

"விஷயத்தைச் சொல்லு தம்பீ, ஏன் விழுங்குகிறாய்?"

"வன்னிய மக்கள் கஷ்டப்பட்டு பண்படுத்திய நிலத்தை தியாகிகளுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டது பெரியவரே, இந்த சர்க்கார்"

"அட அநியாயமே!"

"அநியாயம்தான், அதுமட்டுமல்ல, வாங்கிக் கொண்ட அந்தத் தியாகிகள், நிலத்தை பாவது பக்குவப்படுத்தினார்களா? அதுவுமில்லை. குத்தகைக்கு அல்லவா விட்டு விட்டார்கள்! நீங்களே சொல்லுங்கள் குத்தகைக்கு விட்டால் நிலம் பண்படும், பலன்தரும் என்று நினைக்கிறீர்கள். குத்தகைக்காரன் குவித்துத் தருவான் நெல்லை, என்று கனவு காண்பார்கள் கனவான்கள், கட்டுக்கு உழைப்பான் குத்தகைக்காரன்—நிலம் எங்கே உருப்படுவது? படையாச்சியைப்பற்றி பிரமாதமாகப் பேசினீர்களே, வன்னியருக்கு வாழ்வு தரவா அவர் 'கனம்' ஆனார்? அது சுத்தப் பொய்! ஜாலப் பேச்சு! அவருக்கு, மக்களைக் கவனிக்க நேரம் எங்கே இருக்கப் போகிறது! சீமான் அவர்!ஜாலி பேர்வழி! கேவலம், இந்தநாட்டிலே மந்திரிபதவி ஒரு கவுரவ உத்தியோகமாகப் போய்விட்டது பெரியவரே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்! ஒரு வார்த்தை பேசியிருப்பாரா படையாச்சி இதைப்பற்றி! அதற்காக எங்கள் மாவட்டத்து ஜனங்களும் தூங்கு மூஞ்சிகளல்ல; விழித்துக் கொண்டார்கள்!— ஜில்லா போர்டு தேர்தலில் படை

[ 5-ம் பக்கம் ]

## டில்லிக்குத்தான் வெளிச்சம்!

★

"சர்க்கார் கஜானா காலியாக இருக்கிறது. கைதூக்கி விடுங்கள். தாலியை விற்றுவது வரிப் பணத்தைக் கொடுத்து விடுங்கள்" என்று ஆளவந்தார் பலமுறை கண்ணீர் வடிக்கப் பார்த்திருக்கிறோம்—பத்திரிகைகளிலும் அறிக்கை விடுத்திருக்கிறார்கள். வாங்குகின்ற வரிப் பணத்தை தொழில் துறையில் போட்டு இரட்டிப்பாக்கத் தெரியாவிட்டாலும், நட்டமாவது ஏற்படாமல் பாது காத்துக்கொள்ள வேண்டுமல்லவா! அதற்குக்கூட வழியில்லை இந்த சர்க்காரில். இதோ, சென்ற வாரம் பார்லிமெண்டில் நட்டப் பட்டியல் காட்டியிருக்கிறார்கள் பாருங்கள்.

அயல் நாடு ஒன்றில் இந்தியத் தூதர் காரியலாயச் சிப்பந்திகளுக்காக ஹோட்டல் நடத்திய வகையில் ரூ 1,40,519 நட்டம்.

நேபாள அரிசி வாங்கிய இனத்தில் ரூ. 36,62,717 நட்டம் ஏற்பட்டாயிற்று.

106 மான்யங்களில் 92 மான்யங்களின் பணம் மீந்துவிட்டது.

பார்லிமெண்ட் அனுமதித்த 94 உபமான்யங்களில் 23 தேவையற்றவை. இங்கிலாந்தில் இந்திய சர்க்கார் கொடுத்த பென்ஷன் தொகையான சுமார் 40000 பவுனுக்கு வருமான வரி வசூலிக்கப்படவில்லை.

பெருந் தொகைகளின் பட்டியல் இது. இன்னும் சில்லறை இழப்புகள் எவ்வளவோ? டில்லிக்குத்தான் வெளிச்சம்.

## சொன்னால் கோபம் வருகிறது!

★

'வேதத்திற்கு மாசு கற்பிக்கிறார்கள்' 'வேதியர் குலத்தை பழிக்கிறார்கள்' என்றெல்லாம் நம் மீது சீறி விழுந்தவர்கள், சினங்கொண்டு பல்லைக்கடித்தவர்கள் இனி என்ன சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை.

'வெங்கண்ணா'க்களின் வெறியாட்டத்தை, 'மாடல மறையோன்'களின் துரோகத் தனத்தை, கோட்சேக்கும்பலின் ராட்சசச் செயல்களை கூத்துகளின் வாயிலாக நாட்டுக்குச் சொன்னபோது நாவடக்கும் சட்டம் போட்டவர்கள் இன்று நாண் இட்டுத் தொங்கினாலும், அது விந்தையாகாது, பொது மக்களும் விசனிக்கப் போவதில்லை. அப்பேர்ப்பட்ட சதிச் செயல் நடைபெற்றிருக்கிறது, வடநாட்டிலே.

புனைகதை என்று புறக்கணித்து விடுவதற்கில்லை. ஆதாரமற்ற வீண் புகார் என்று ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியாது. பூரிஜகன்னாதர் கோயிலின் நிர்வாகம் பற்றி விசாரணை நடத்திய விசேட அதிகாரி ஒருவர் சில ருசிகரமான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

"கோயில் அதிகாரிக்கு பக்தி என்பது கொஞ்சம்கூட இல்லாமல் போய்விட்டது. இப்போதிருக்கும் பூசாரிகள் கடனுக்காக பூஜைகள் நடத்தி வருகிறார்கள். ஜெகன்னாதர் கோயில் சூபிரெண்டாக உள்ள பூரிராஜா கோயிலின் கணக்கை தனியாக வைத்துக் கொள்ளாமல் தன்னுடைய சொந்த வரவு செலவுக் கணக்கில் சாமியின் வரவு செலவுக் கணக்கையும் எழுதிவைத்திருக்கிறார்."

இந்த ஊழலை அம்பலப்படுத்திய அதிகாரி சுயமரியாதைக் கட்சிக்காரரல்ல; 'பார்ப்பானே வெளியேறு' என்று பேசும் தீவிர வாதியுமல்ல: அரசாங்க அலுவலாளர், அவரது கடமையைச் செய்திருக்கிறார்.

ஒரே ஒரு கோயில்! அதைப் பரிசீலனை செய்ததிலேயே இவ்வளவு பெரிய ரகசியம் அப்பலமாகி இருக்கிறதென்றால், பள்ளிக்கூடங்களைக் காட்டிலும் எண்ணிக்கையில், கோயில்களை அதிகமாகக் கொண்ட இந்தப் 'புண்ணிய பாரதத்தில்' எந்தெந்த மூலையில், எந்தெந்த ஆலயங்களில் என்னென்ன திருவிளையாடல்கள் நடைபெறுகின்றனவோ! யாரறிவார் மர்மத்தை? சொன்னால் மட்டும் கோபம் வருகிறது; 'பாவிகள்! நாக்கு அழுகாதா இவர்களுக்கு' என்று சாபம் போடுகிறார்கள்!

# தலையங்கம்

-ரா-

சென்னை [ 24—9—54 ] வெள்ளி

## வம்புக்கு இழுக்கிருர் !

சீறிவரும் புயற்காற்றிலிருந்து தப்ப, பாய்மரத்தை சுற்றிவைத்து நல்ல இடத்திலே நங்கூரம் பாய்ச்சும் மாலுமியை நாம் பாராட்டுவதுண்டு— கலத்திலுள்ள உயிர்கள் காப்பாற்றப் பட்டனவே என்கிற காரணத்தால் !

பச்சைக் குழந்தைகளின் பிஞ்சுத் தசையை தேடித் திரியும் ஓநாயின் எலும்பொடித்த வீரனுக்கு கைலாகு கொடுப்பதுண்டு — தனித்து நின்று அவன் வெற்றி கண்டானே என்ற எண்ணத்திஞல்!

இதே நிலையில்தான் நாமும் விருதுநகர் வீரர் — தேசியச் சுருதி கூட்டி இன உணர்ச்சி விருத்தம் பாடும் சூரர் என்றெல்லாம் சொல்லப் பட்ட காமராசருக்கு பாராட்டுரை பகர்ந்தோம்—சிற்சில இடங்களிலே வருங்கால திராவிடத்தின் முடிசூடா மன்னவரே என்றுகூட வாழ்த்துரைத்தனர் அவர் பொதுமக்களின் ஏகோபித்த குரலை மதித்து குலஹுகபட்டரின் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தாரே என்கிற காரணத்திற்காக !

அப்பப்டா; ஆச்சாரியார் நாற்பது ஆண்டுகளாக நிலம் பறித்து, நீர் பாய்ச்சி வளர்த்த அந்தக் கருவேலங் காட்டை அழிப்பதற்குத்தான் நாம் எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கிறேம் ! ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட காளைகளை காராக்கிரகத்திற்கு அனுப்பிய பிறகுதானே காகபட்டரின் ஆட்சிபீடம் ஆட்டம் கொடுப்பேனென்றது. அந்த வெற்றிக்காக நாம் பெற்ற தழும்புகள் கூட மறைந்து விடவில்லை· அதற்குள்ளாகவே அவரது ஆழ்வாராதிகளில் ஒருவராம் — போதாகி மலர்ந்து விட்ட மக்கள் சக்தியை, மறந்துவிட்ட பண்புக்கு இன்னும் கழுவாய் தேடிக் கொள்ளாத கொங்குநாட்டுக் கோமகனும் நிதி அமைச்சர் சுப்ரமணியம் நம்மை மீண்டும் களத்திற்கு அழைக்கிருர். சென்ற கிழமை அவர் ஈரோட்டிலே பேசியிருப்பதைப் பார்த்தால் நம்மை மீண்டும் வம்புக் கிழுப்பதாகவே தோன்றுகிறது. "நாட்டிலே புகுத்தப்பட்ட புதுக் கல்வித் திட்டத்தை நாங்கள் கைவிட்டு விடவில்லை: ஒத்திவைத்திருக்கிறேம்." என்று கூசாமல் கூறியிருக்கிருர், அவர் !

குடியேற்றம் தேர்தலிலே வெற்றிக்கொடி உயர்த்தி, ஜனநாயக மங்கையின் தளிர்க் கரம்பிடித்த காமராசரின் எண்ணம் தெரிந்துதான் சுப்ரமணியம்—பேசியுள்ளாரோ; அல்லது குப்புற வீழ்ந்தோம்; புற முதுகில்மட்டும் மண்ணில்லையே என்கிற வண்ணம், தான்தோன்றித் தனமாகத்தான் பேசியுள்ளாரோ என்னவோ நாமறியோம். எப்படியிருந்தபோதும், நாம் மதிப்பளிக்கும் ஜனநாயகத்திற்கு மாலையிட்டு மகிழ்ந்த மணவாளனும் காமராசரைக் கவிழ்க்க அவரது கூடாரத்திலேயே ஒரு சதி உருவாகியிருக்கிறது என்பது மட்டும் அவரது பேச்சிலிருந்து புலனுகிறது.

நெஞ்சிணையாளோடு பஞ்சணையிலே மகிழ்ந்திருப்பவர்கள் தாங்கள் கடந்து வந்த நெருஞ்சிமுட் பாதையை சில சமயம் மறந்து விடுவதுண்டு. காமராசர் இவ்வளவு விரைவில்பொல்லாங்குக் காரர்கள் விடுக்கும் சொல்லம்புகளின் அம்புராத்தூணி யாகிவிடுவார் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

காடு, மேடு சுற்றியவர், அவர். வேழத்தின் வலிமையையும், மோழைகளின் முணகலையும் உணர்ந்தவர்தான், அவர்.

அத்தகையவரால் தன்னைப் புதைப்பதற்கு தன் காலடியிலேயே தோண்டப்படும் படுகுழியை நிச்சயம் உணராமலிருக்க முடியாது. உணர்ந்தும்கூட, சுப்ரமணியத்தின் பேச்சுக்கு அவர் இதுநாள் வரை மறுப்பளிக்காமல் ஊமையாக இருப்பதுதான் நம் நெஞ்சைக் குத்துகிறது.

கூர்வாள் சுழற்றி, பகைக் கூட்டத்தைக் கிழித்தெறியும் ராஜாதி ராஜர்கள்கூட, தளகர்த்தனின் சிறு தவறுகளால் தலைகவிழ்வதுண்டு.

சகல ஜீவராசிகளுக்கும் படியளந்து ரட்சிப்பதாக சொல்லப்படும் ஆண்டவன் கூட, புரோகிதரின் புரட்டுகளால் பெருமை இழக்கிருன். அத்தகைய திறனழிந்த தளபதிதான்—பொல்லாத புரோகிதர் தான் காமராசருக்குக் கிடைத்திருக்கும் சுப்ரமணியம்!

அதுமட்டுமல்ல; சுப்ரமணியம்,—வளர்ந்துவரும் காமராசரின் மதிப்புதனை மறைத்து நிற்கும் மண்மேடு; காகபட்டர் வித்திட்டு வளர்த்திடும் கள்ளிக்காட்டிற்குப் போடப்பட்டிருக்கும் முள்வேலி. தென்னிலங்கை வேந்தன் இராவணனின் இனஉணர்ச்சிப்படையிலே கலந்துவிட்ட விபீஷணன், அவர்.

மக்களின் மதிப்புபெற்ற ஆட்சியாளர் என்று காமராசர் சரித்திரத்திலே இடம்பெற விரும்பினுல், பொதுமக்களை கேவலம்ஜடப்பொருள்களாக நினைக்கும் சுப்ரமணியங்களின் கூட்டுறவு அறுபடவேண்டும்.

'பஜகோவிந்தம் பாடி'யின் தூண்டுதலோ அன்றி கல்கியாரின் கண்ஜாடையோ என்னவோ நிதி அமைச்சர் நம்மை போர்முனையிலே சந்திக்க சவால் விடுத்திருக்கிருர். அதற்காக நாமும் தயங்கிவிடவில்லை. தினவு கொண்ட தோளினரே! மமதையாளரின் கனவு கலைக்கும் திட்டமிதோ—தீட்டிய வாளிதோ என்று நமக்கெல்லாம் பொதுச், செயலாளரும் 'நம்நாடு' வாயிலாகக் குரல் கொடுத்துவிட்டார்; "அறப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதே தவிர கைவிடப்படவில்லை" என்று!

அந்தோ, பரிதாபம்!—நிதி அமைச்சரும், அவரை அணைந்து நிற்கும் அரசாங்கத்தினரும் தூங்கும் வேங்கைதனை இடறுகின்றனர்; அதன் பாய்ச்சலைக்கூட தாங்க முடியாத வலுவினர்!

'குடியேற்றம்' தான் முடிந்துவிட்டதே இனிக் குள்ளநரிச் செயல் புரிந்தால் என்ன என்கிற நினைப்பிலே காமராசர்கூட இந்த விபீஷணருக்கு பின்பாட்டு பாடியிருக்கலாம். அந்தோ, அக்ரமம்! பத்துமாதம் சுமந்து பெற்ற தாயைக் கொன்று—அவள் தோலினுல் செய்த செருப்பைக்கூட தானம் வழங்கிவிடலாம். ஆனுல் கெஞ்சிக் கூத்தாடி ஓட்டுகளைப் பெற்றுவிட்டு பின்னர் அந்த வாக்காளர் வாயிலே போடும் மண் இருக்கிறதே, அதைப்போன்ற கொடுஞ்செயல் இந்த உலகத்திலே வேறு எதுவுமே கிடையாது. இத்தனை நாட்களும் தவறுகளை அனுமதித்த தமிழகம் இனிமேலும் சும்மா இருக்க முடியாது.

" குகைவிட்டு கிளம்புதுகாண் செந்தேள் கூட்டம்
அதன் கொடுக்கறுக்கப் புறப்பட்டார்"
— திராவிட நாட்டார்!

— பாடிக் கொண்டே நமது படை கிளம்பத்தான் போகிறது. அநியாயக் காரர்களை-அவர்களுக்கு வால்பிடித்து, வாய்பிளந்து நிற்கும் ஜம்பூடாஸ்களை அழிக்கத்தான் போகிறது! அதற்குள் அவர்கள் திருந்திவிட வேண்டுமென்பது தான் நம்முடைய பேரவா !

## 'மாய்கை நாதர்' சார்பில் மந்திரியின் வாதம் !

கட்டழகி ஒருத்தியோடு கைது செய்யப்பட்ட கபடயோகியைப் பற்றிய துர்நாற்றம் கட்டாக் பகுதியில் இன்னும் குறைந்தபாடில்லை. அதற்குள்ளாகவே கோரக்பூருக்கு பக்கத்திலிருந்து ஒரு புதிய நாற்றம் பரவத் தொடங்கியிருக்கிறது பிரபலயோகி என்று கருதப்பட்ட பிந்தாசிங், கன்னிப்பெண்கள் சிலரோடும், கள்ளத்துப்பாக்கி பலவற்ருேடும் கைது செய்யப்பட்டிருக்கிருர். உத்திரப் பிரதேசத்து ஊராளுமன்றத்தில் இந்தச் செய்தி கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது, அதுவும் உள்நாட்டமைச்சரால்! பிந்தாசிங்கின் பர்ண சாலையை போலீசார் சோதனையிட்டதில் விலையுயர்ந்த சாமான்களும் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அந்தத் துறவிக்கு துப்பாக்கிகளைத்தந்தது சர்க்கார் அதிகாரிகள்தான் என்பதையும் மந்திரி சொல்லியிருக்கிருர். என்ருலும், இந்தக்கபட நாடகத்தைப் பற்றி மந்திரி, தன் சொந்தக் கருத்தை வெளியிடுகையில், பர்ணசாலையில் பார்க்கப்பட்ட சொத்துக்கள் சந்தேகப்படும் படியாக இல்லையாம்! பிந்தாசிங்கிற்கு ஏராளமான பக்தர்கள் இருக்கிறபடியால், அந்தப் பொருள்களெல்லாம் பக்தர்களின் அன்பளிப்பாக இருக்கலாமாம்! மதியூக மந்திரி சொல்லுகிருர். சொத்துக்கள் பக்தர்களின் தானமாம்! சொல்லுவதற்கே நமக்கு நாகூசுகிறது—எப்படியோ அவர்கள் சொல்லிவிடுகிருர்கள், நம்மையெல்லாம் சிந்தனையற்றவர்களென்று கருதி! சொத்துக்கள்தான் தானமென்ருல் அந்த சுந்தரிகளைத் தானம் செய்தது எந்தப் புவியரசனே? 'மாய்கைநாதர்'களுக்கு பரிந்து பேசிய அந்த மந்திரியார் மங்கையர் குழாத்திற்கு, அந்த மாமுனிவர் ஆஸ்ரமத்தில் என்னவேலை, ஏன் அவர்களை அவர் துணைக்கு வைத்திருந்தார் என்பது குறித்து பேசவில்லை. மௌனம் ஏன் மந்தியாரே என்று நாம் மட்டும் கேட்கவில்லை—நாடே கேட்கத் தலைப்பட்டுவிட்டது.

அதுமட்டுமல்ல; தனது முதல் வாக்குமூலத்தில், அந்த சாமியாருக்கு துப்பாக்கி தந்ததும் துணைபுரிந்ததும் சர்க்கார் சிப்பந்திகள்தான் என்றுகூறிய மந்திரிக்கு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கத் துணிவில்லை—போதிய ஆதாரமில்லை என்று மூடிமறைத்திருக்கிருர். காலம் ஓர் கதிரவன்; இருட்டறை நாடகத்தைநீண்ட நேரம் நடத்த முடியாது என்பதை அமைச்சருக்கு [illegible]மாகத் தெரிவிக்க ஆசைப்படுகிறேம்.

# நச்சுக் கனி

[வரலாறு]

“கமலினீ, கை கூடி விட்டது உன் ஆசை! நெடு நாட்களாக நீ நினைத்துக் கொண்டிருந்த எண்ணம் வெற்றி பெற்று விட்டது.”

“என்ன வைத்தியரே! நீங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லையே! புரியும்படி கூறுங்கள்!”

“அப்பாவிப் பெண்ணே! அவனியோர் புகழும் ஆணழகன் — ஆண்மையாளன் — கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர், உன் கடைக் கண் வீச்சுக்காக காத்துக் கொண்டிருக்கிறான், போ! பக்குவமாக நடந்து கொள்! பரிசுகளைப் பெற்றுவா! இந்த டாரி வைத்தியனை மறந்து விடாதே!”

என்ன வைத்தியரே, நானென்ன நன்றி கெட்டவளா? கமலினியை அப்படி நினைத்து விடாதீர்கள். எனக்குக் கிடைக்கும் பரிசில் பாதி உங்களுக்குத்தான். இது உறுதி!”

“சபாஷ், கமலினீ, இன்று உனக்கொரு மருந்துதருகிறேன், தேஜஸை நிலைக்க வைக்கும் தெய்வீகப் பொக்கிஷமது. ஒரு முறை சாப்பிட்டால், ஒரு நூறு ஆண்டுகள் வரை இளமை குன்றாது. வையகம் உள்ளவரை நீ வடிவழகியாகவே வாழலாம் வா, ரசாயண சாலைக்குப்போவோம்” என்று கூறி புருஷோத்தமனின் அரண்மனை வைத்தியன் அழைத்துப் போய் கமலினிக்குஒரு திராவகத்தைக்கொடுத்தான். கமலினி அதை அருந்திவிட்டு. அலெக்சாண்டரின் பாசறைக்குச் சென்றாள்,

மறு நாள் காலை!

ஜீலம் நதிக் கரைப் போரில் வாகை சூடிய வீரன் அலெக்சாண்டர் படை வீரர்கள் புடை சூழ பாசறையில் அமர்ந்திருந்தான். அவனுடைய முகத்தில் சோர்வு படிந்திருந்தது, உற்சாகம் குன்றியவனாக காணப்பட்டான். அப்போது அலெக்சாண்டரின் அந்தரங்கச் செயலாளன் ஓடி வந்து “வேந்தே! வழக்கத்திற்கு மாருக உங்கள் முகம் வாட்ட முற்றிருக்கிறதே” என்று கேட்டான்.

“என் முகமாவாடியிருக்கிறது இன்பக் கடலில் நீந்திக்கொண்டிருக்கும் அலெக்சாண்டரின் முகமா வாடியிருக்கிறது?”— வியப்போடு கேட்டான் வீரன் அலெக்சாண்டர்.

“ஆம் அரசே, முகம் மட்டிலும் கூட வாட்ட முற்றிருக்கவில்லை. கண்கள்கூட ரத்தச் சிவப்பேறியிருக்கின்றன. நேற்றிரவு நன்றாகத் தூங்கவில்லை என்று கருதுகிறேன்” — அந்தரங்க செயலாளன்.

அலெக்சாண்டர் ஏளனமாகச் சிரித்து, “நானு தூங்கவில்லையென்று கூறுகிறாய்? என் வாழ்க்கையிலேயே நான் நன்ருகத் தூங்கியது நேற்றுத்தான்! அருமையான தூக்கம்! நிம்மதியான தூக்கம்!”

“ஒரு வேளை படுக்கைக்கு தாமதித்துச் சென்றிருப்பீர்கள்?”

“அப்படியுமில்லையே! உன் வினு வேடிக்கையாக அல்லவா இருக்கிறது!”

“வேந்தே, உங்கள் தோற்றம் எனக்கு ஏதோ ஒரு ஐயத்தைக் கொடுக்கிறது. எதற்கும் நான் போய் அரண்மனை வைத்தியனை அழைத்து வருகிறேன்.” என்று கூறி ஆசனத்தை விட்டெழுந்தான், அலெக்சாண்டரின் மெய்காப்பாளன். அந்த நேரத்தில் அலெக்சாண்டர் இருமத் துவங்கினுன். பக்கத்திலிருந்த வீரர்கள் அலெக்சாண்டரை உற்று நோக்கினர். இருமல் நின்ற பாடில்லை. அவனுக்கு தலை சுற்ற ஆரம்பித்தது. வாயிலிருந்து ரத்தம் கசிந்தது. அலெக்சாண்டரால் வேதனையைப் பொறுக்க முடியவில்லை. அவன் கையிலிருந்த உக்கா நழுவிக் கீழே விழுந்தது. மயக்க முற்று மஞ்சத்தில் சாய்ந்தான். பார்வையும் குன்றிக்கொண்டே வந்தது. சூழ்ந்திருந்த கிரேக்க வீரர்களின் முகத்தை கவலை முற்றுகை யிட்டது.

∴ ∴ ∴

புருஷோத்தமன் மாளிகை!

“யாரங்கே! அரண்மனை வைத்தியனை இழுத்து வாருங்கள்! மருந்தாம்! மண்ணாங்கட்டியாம்! கிரேக்கப் புரவலனைப் புதுமுறையில் கொல்கிறுனும்!” இவ்வாறு கர்ஜித்தான் புருஷோத்தமன், சினம் கொண்ட சிங்கத்தைப் போல இங்கு மங்கும் உலாத்திக் கொண்டு.

நடுக்கத்தோடு அரண்மனை வைத்தியர் வந்தார்.

“என்ன வைத்தியரே, செய்து முடித்தீரா நான் சொன்ன வேலையை?”

“நேற்று மாலையே செய்து முடித்துவிட்டேன், முடியரசே!’

“பலன் கண்டீரா? உன்னுடைய மருந்து அங்கே வேலை செய்யவில்லை போலிருக்கிறதே!”

“என் மருந்தா வேலை செய்யவில்லையென்கிறீர்? நான் கொடுத்திருக்கும்விஷம் இதுவரையாரையும் நாசமாக்காமல் விட்டதில்லை வேந்தே. எனது சூழ்ச்சியிலே சிக்கிச் சுருளாமல் தப்பியவர்கள் யாருமில்லை. அரசே, அலக்சாண்டர் அஞ்சா நெஞ்சனுக இருக்கலாம். அகில உலகம் போற்றும் வீரனுகத் திகழலாம். சென்ற செருமுகமெல்லாம் வாகை சூடியவன்தான் அலெக்சாண்டர்என்பதும் எனக்குத்தெரியும். ஆனுல் நமது விஷக்கனியை வீரன் அலெக்சாண்டரால் வெற்றி கொள்ள முடியாது மன்னவா!”

“விஷக்கனியா?”—ஆச்சரியத்தோடு கேட்டான் புருஷோத்தமன்.

“ஆம், விஷக்கனிதான். இது வரை எந்த நாட்டாரும் கண்டு பிடிக்காத புதுமுறையான நச்சுக்கனி’.

“விளக்கம் வேண்டும் வைத்தியரே!”

“போரில் வெற்றிகண்ட மறு நாள் ஸ்திரீபோகம் செய்யும் அலெக்சாண்டர் வழக்கப்படி, ஓர் ஆரணங்கு தேவை என ஆளனுப்பினுனல்லவா?”

“ஆம், நீதான் அரண்மனைத் தாதி கமலினியை அனுப்பினுய் அதற்கும் இதற்கும் என்ன சம்மந்தம்?”—இது மன்னனின் குறுக்குக் கேள்வி

“மன்னிக்க வேண்டும் மன்னவரே! தங்களின்ஐயப்பாடுகளை இறுதியில் வைத்துக்கொள்ள வேண்டுகிறேன்.”நான் ஒரு புது விஷத்தைக் கண்டு பிடித்தேன், அந்தவிஷத்தை ஒருபெண்ணின் உடலில் பாய்ச்சி, அதே பெண்ணை அன்றிரவேவேருெரு ஆடவனேடு கூட விட்டால், போகம் முடிந்த சில மணி நேரத்திற்குள் ரத்தம் கக்கி அந்த மனிதன் இறந்து விடுவான். அந்தப் பெண்ணும் வேறு எதற்கும் பயன்பட மாட்டாள். இந்த முறையைத்தான் நேற்று நான் கையாண்டிருக்கிறேன்” என்று வைத்தியன் செல்லி முடிப்பதற்குள், ஒரு சேவகன் தலை தெறிக்க ஓடிவந்து, “வேந்தே! அலெக்சாண்டர் இறந்து விட்டார்” என்ருன்,

புருஷோத்தமன் முகம் புன்முறுவல் பூத்தது, “ஒழிந்தானு உன்மத்தன்! மாண்டானு மாபாதகன்! புவிபோற்றும் புருஷோத்தமனின் மணிமுடி மண் மேலே உருளுவதா? கண்ட களங்களை ’யெல்லாம் செம்மணலாக்கி ஜெபக்கொடி நாட்டிய எனது படைகள் மாற்றானுக்கு மண்டியிடுவதா? வீரம் மட்டும் போதாது; விவேகமும் தேவை என்பதை உணரவில்லை அந்த வீணன்!...மாவீரனும் | மாநிலம் அவனை போற்றுகிறதாம்! — ஒரு வேளை உலகம் என்னை இகழ்ந்தால்? — யாரைத்தான் உலகம் விட்டு வைத்திருக்கிறது? வெற்றி எந்த வகையில் கிடைத்தாலென்ன? வீரத்தால் வெல்ல முடியாததை வஞ்சகத்தை வெற்றி கொண்டால் அது ஒரு கேவலமா? வாளால் சாதிக்க முடியாததை வனிதைதையின் உதவி கொண்டி சாதிப்பது ஒரு இழுக்கா? எப்படியும் எனக்குத் தேவை வெற்றி தானே? — வைத்தியரே! இதோ வைரமலை உமது திறமைக்கு!” என்று கூறி ஒரு வெற்றிச் சிரிப்பு சிரித்தான் புருஷோத்தமன்.

ஃ ஃ ஃ

மாவீரன் அலெக்சாண்டர் மாய்க்கப்பட்டான் என்று எந்த வரலாற்று ஆசிரியர்களும் துணிந்து கூற வில்லை. வீரன் அலெக்சாண்டரின் படை வீரர்களுக்கு போரில் சளிப்புத் தட்டியதாகவும், அதனுல் அவர்கள் சொந்த நாடு திரும்ப துடி துடித்தனரென்றும், ஆகவே அலெக்சாண்டர் சொந்த நாடு திரும்பினுன் என்றும், அவ்வாறு திரும்புகையில், வழியில் அலெக்சாண்டர் நோய்வாய்ப்பட்டு இறந்தானென்றும் நொண்டிச் சான்றுகளைக் கூறியுள்ளனர். உண்மை அதுவல்ல. அலெக்சாண்டரை வட நாட்டு வேந்தன் சூழ்ச்சியால் வீழ்ச்சியுறச் செய்துவிட்டான் என்பதற்கு நம்மால் ஆதாரம் காண்பிக்க முடியும். அந்தமுறை நமக்குஒரு அவமானம்! ஆனுல் ஆரிய தர்மப்படி அது ஓர் வகையான வீரம்!

●

## வாழ்த்துகிறேம்

●

கோவை, தோழர் எஸ். ஏ ராசமாணிக்கம் அவர்களுக்கும், சேலம் செவ்வாய்ப் பேட்டை திரு. என். கிருட்டிணசாமி அவர்களின் மகள் செல்வி சம்பூர்ணத்திற்கும் 16-9-54 வியாழன் காலை தோழர் ஈ. வி.கே. சம்பத் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. நண்பர்களும் உறவினர்களும் விழாவிற்கு வந்திருந்து திருமணத்தைச் சிறப்பித்தனர்.

வாழ்க, மண மக்கள்!

## பொதுக் கூட்டம்

●

26—9—54 ஞாயிறு மாலை 37-வது வட்ட தி.மு.க. சார்பில் சென்னைராயப்பேட்டையில் தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

# கரையான் புற்றெடுக்க; கருநாகம் வாழ்வதா?

★

பெருக் கெடுக்கும் ஆற்றுவெள்ளம் கரை அமைக்காவிட்டால் பயன் தராது. வானளாவி நிற்கும் மூங்கில் மரமும் காற்றடைத்து ஊதினுல் தான் இசை எழுப்புகிறது. ஊற்றெடுக்கும் தமிழார்வம்கூட அப்படித்தான்! சரியான அமைப்பு அமையாத வரை தீப்பொறிக்கும், புதுக் கொள்கைகளும், வேற்படை கொண்டுதாக்கும் செய்கைகளும் உணர்ச்சிப் பிரவாகத்தில் ஒரு சிறு துளியாக மறைந்துவிடுகின்றன,

புலவர்க்கு வேலான தமிழ்—புரவலரின் பெருமையைப் பறைசாற்றிய தமிழ் ஒரு காலத்தில் ஜரிகைக் குல்லாய்களின் ஜமா பந்தியில் மட்டுமே பேசப்படும் தகுதி பெற்றிருந்தது. வித்தகனும் அகத்தியனின் வரலாறு தெரிந்தவர்கள்தான் தமிழன்னையின் தெளிவைப் போற்றினர். வடமொழிச் சாகரத்தின் கரை கண்ட சிரோண்மணிகள் மட்டும்தான் அன்னைத் தமிழுக்கு அணிகலன் சூட்ட முடியும என்ற நம்பிக்கை நடமாடிக் கொண்டிருந்தது. 'தலைவர்' 'அக்ராசனதிபதி'யாகபவனிவந்த காலம் அது! அப்போது ராஜவீதிகளிலும் தென்றல் மாளிகைகளிலும் தமிழன்னை சிறைப்பட்டிருந்தாள். வேத, ஆகமங்களின் இரும்புக்கரத்திலே சிக்கி. வடமொழிச் சவத்தின் பாததூளிகளை வணங்கி ஒடுங்கி நின்றுள். தமிழன்னையின் இந்த நிலையை பகுத்தறிவு இயக்கம் மாற்றி அமைத்துவிட்டது. எனவே தான் தமிழின் பெருமையை மட்டுமல்ல, அதன் சீர்திருத்தம் பற்றிகூட பாமரர்கள் பேசுகிருர்கள். இப்போது இன்னும் மகிழ்ச்சிகரமான செய்தி ஒன்று வந்திருக்கிறது. ஜஸ்டிஸ் சோமசுந்தரனரின் சீரிய தலைமையிலே தமிழ்க்கலைகளை வளர்க்க, 'தமிழ் மன்றம்' ஒன்று நிறுவியுள்ளனர். முதறிஞர் தனிநாயகம் வெளி நாடுகளில் தமிழ்பற்றி செய்ய வேண்டிய வேலைகளை விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்.

தித்திப்பான செய்திதான், நமக்கு! சுப்ரீம் கோர்ட் நீதிபதி பாம் வெங்கட்ராமஅய்யர்களெல்லாம், ரசிக ரஞ்சனி சபாக்களில் அங்கம் வகித்து ஆவன செய்யும் போது, நம்மவரிலும் ஒருவர் நமது மொழியின் வளர்ச்சியிலே பங்குபெற முன்வந்திருக்கிருர். நம் சிந்தை குளிர்கிறது. வி. எஸ். தியாகராஜ முதலியார், கரிமுத்து தியாகராஜ செட்டியார் — ஆகியோரும் தமிழ் மன்றத்தின் செயற்குழுவிலே பங்கு பெறுகின்றனர். சங்குநிகர் கதராடையிலே இத்தனை நாட்களும் தங்கள் கவனத்தைச் செலுத்தியிருந்த கனவான்கள் இப்போது, வளர்சசி குன்றி வழி தவறிய தமிழுக்கு கலங்கரை விளக்கம் சமைக்கின்றனர். கனம்களின் கவனம் பணப்பெட்டியை விட்டு நகர்ந்து, கன்னித்தமிழின் பக்கம் திரும்பி இருப்பது சுவைதரும் செய்தி மட்டுமல்ல; தமிழின் வருங்காலம் பற்றி நமக்கு நம்பிக்கை ஊட்டும் செய்தியுமாகும். இந்த நேரத்திலே நம் உள்ளத்தில்ஒலிக்கும் சந்தேகக் குரலையும் வெளியிட வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம்.

நாட்டுக்கோட்டை செட்டியார்கள் அஸ்திவாரமிட்ட இந்தியன்பாங்கி இப்போது, பாங்கியர் புடை சூழ பவனிவரும் ராஜகுமாரியைப்போல பூணூல் ஏந்திகளும், அவர் அடி தொழுவாரும் நிரம்பிக் கிடக்கும் பார்ப்பனச் சேரியாகக் காட்சி தருகிறது, ஒரு கோபால அய்யரால்! இந்தியன் பாங்கியில் மட்டுமல்ல இந்த நிலைமை. கரையான் புற்றெடுக்க பாம்பு குடியேறிய கதையாகத்தான் இத்தனை நாட்களும் திராவிட சமுதாயம் தன் சொந்த மனையை மாற்றானின் இருப்பிட மாக்கித் தந்துவிட்டு திருவோடும் கையுமாக தெருவிலே அலைகிறது. நன்றாக வாழ்ந்த நமது நிலை குலைத்த அந்த இனத்தை, வலை விரித்து வஞ்சிக்கும் கணிகையரோடு ஒப்பிடலாம். வெண்பட்டும் திருநீறும் அணிந்த அந்தஉஞ்சி விருத்திகள் நம்மீது நஞ்சுதுவ காத்திருக்கும் பாம்புக் கூட்டம். நெஞ்சாழம் கொண்டிருந்த வீரர்களின் கோட்டைகளை தரை மட்டம் ஆகியிருக்கின்றன; அழைக்காமல் வந்து புகுந்து கொள்ளும் அந்த தர்ப்பாசுரர்களின் மத்தியிலே தமிழ் மன்றம் எத்தனை நாட்கள் வாழமுடியும் என்பதுதான் நமக்குப்பெருத்த கவலையைத் தருகிறது.

தமிழ்க் கலாச்சாரத்தின் செல்வாக்கை ஆராய்ச்சி செய்யும் முயற்சிகளுக்கு உதவி புரிய வாட்முல் நிதி, ராக்பெல்லர் நிதி, கார்னிஜி நிதி முதலிய பல ஸ்தாபனங்கள் தயாராக இருக்கின்றனவாம். பாதர் தனிநாயகம் தான் இந்த தகவலைத் தந்திருக்கிருர். இந்த தேனை செய்தியை நாம் சுவைத்துக் கொண்டிருக்கும்நேரத்திலே, சூதுக்காரர்கள் தமிழ்மன்றத்தின் வளர்ச்சியிலே பங் கேற்பதுபோல பாசாங்கு செய்து, இந்த சலுகைகளிலே பங்கு பெற வந்துவிடுவார்கள். பின்னர் மொழி, இலக்கியம், கலாச்சாரம் ஆகியவை பற்றி கூடும் சர்வதேச மாநாடுகளுக்கு தமிழ் மன்றத்தின் பிரதிநிதியாக சேதுப்பிள்ளையும், டாக்டர் வரதராசனும் செல்ல முடியாது; இத்தனை நாட்களும் எங்கோ கிடந்த சாஸ்திரிகளும், சர்மாக்களும் தான் செல்ல முடியும்.

கடல் கடந்த நாடுகளில் ஒரு சில 'கனபாடிகள் மட்டுமே' கோடுயர் வேங்கடத்தின் சிறப்பு பாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். இந்த கோரக் காட்சியைத்தான் தமிழ் மன்றம் படம் பிடித்துக் காட்டப் போகிறதா? இந்தக் கேள்விதான் நல்லவர் இதயந்தோறும் தவழ்ந்தபடி இருக்கிறது.

நிலைக் கண்ணடிபோல நிலவொளியைப் பிரதிபலிக்கும் அழகான வேயாமடம்; அதிலே செந்தேள் கூட்டத்தை நடமாட விடக்கூடாது. இந்தநிலைமை ஏற்பட தமிழ் மன்றத்தில் உண்மையான தமிழ்மணம்கமழவேண்டும். ஈதென்ன வகுப்புவாதம் என்று பழியுரைத்துக் கிளம்பும் ஈசல் கூட்டம் — அதன் சிறகறுக்கும் சித்தம் கொண்டோர் தமிழ் மன்றத்திற்குத் தேவை. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்தால் தான் தமிழ்மன்றம் மற்றொரு இந்தியன் பாங்கி ஆகாமலிருக்க முடியும். ஃ

## மேனன் இசைக்கும் கானம்!

*

கிருஷ்ண மேனன் தென்னட்டுக்காரர்தான்; கேரளத்து மண்ணிலே கையூன்றிஎழுந்து நடை பயின்று வளர்ந்தவர்தான் அதற்காக அவர் குட்டுவதும், நாம்தலை குனிவதுமாகஎவ்வளவு நாட்களுக்குத் தானிருக்கமுடியும்! அவர் செல்லுமிடமெங்கும் சாத்வீகத்தின் சிறப்பு பற்றி சிங்கார ஆங்கிலத்தில் சொல்லாற்றி வருகிருர். பெருமைப் படுகிறோம், அவர் தலை சிறந்த ஆங்கிலப் பேச்சாளர் என்பதற்காக! உவகை யடைகிறோம்; அறப் போரின் மாண்பை அகிலத்திற்கு உணர்த்துவது குறித்து! ஆனல் அவரது உபதேசம் 'ஊருக்குத் தான், தனக்கல்ல' என்று ஆகும்போது களிப்பு கவலையாக உருவெடுக்கத் தானே செய்யும். சென்ற வாரம் மேனன் வெளி நாடுகளில் கலந்து கொண்டுள்ள கூட்டங்களிலெல்லாம் இந்தியா அன்னியத் திட்ட விஷயங்களில் சாத்வீகத்தைத்தான் கையாளும் என்பதாக இந்தியாவின் புகழ் பாடி பண்டிதரின் பாசத்திற்கு மேலும் மெருகு கொடுத்துக் கொண்டிருக்கிருர்' அந்நியத திட்டுகளின் விஷயத்தில் அகிம்சையே எம் கொள்கை என்பவர், ஏன் சொந்த நாட்டில் அடக்கு முறைகளைக் கையாள வேண்டும்? துப்பாக்கித் துரைத்தனம் நடத்துவதும், துவளத் துவள அடிப்பதுமான கொடுஞ் செயல்கள் தாயகத்தில் மட்டும் ஏன் தாண்டவமாட வேண்டும்? திரு. கொச்சி. தமிழ் பகுதியை மயானமாக்கி விட்டு, திராவிடத்தின் எழுச்சிக் குரலை நெறித்துக்கொண்டு, கடல் கடந்து சென்று 'எல்லோரையு போலவே எண்ணலாகுமோ எம்மை' எனஏன் ஏமாற்று வித்தை செய்ய வேண்டும்? மேனனுக்கு கிடைத்திருக்கும் மேலான வாழ்வு அவருடைய மனச் சாட்சியையுமா கொன்றுவிட்டது! ஐயோ, நீதி தேவா! இன்னுமா நித்திரையிலிருக்கிருய்?

## விம்முகிருர்கள்....

[ 2-ம் பக்க தொடர்ச்சி ]

யாச்சியை நம்பியவர்களுக்கு 'திரிசங்கு சொர்க்கம்' தான் பெரியவரே. அது மட்டும் நிச்சயம்! நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், காங்கிரசின் பேரால் ஒரு கழுதையைநிறுத்தினலும் ஓட்டு போடும் நம்பிக்கை மனேபாவம் ஒரு காலத்தில் மக்களிடையே இருந்ததல்லவா!"

"சந்தேகமென்ன தம்பி?"

'இப்போது அப்படியில்லை பெரியவரே, பதவியிலிருப்பவர்கள் போதை ஏறியவர்களாக அல்லவா இருக்கிருர்கள்; போதை நிலையானதல்லஎன்பதைமறந்து"

"நீ சொன்ன பிறகு தான் தம்பி, இதெல்லாம் எனக்குத் தெரிகிறது. இதையெல்லாம் நான் எப்படி அறிவேன். கண் குருடாகப் போனதிலிருந்து

## பிரண்டைக்கொடி

### 6



பரிமளா மீது விழ இருந்த அரிவாள் வெட்டைத் தடுத்து நிறுத்தியது வெள்ளியம்பலத்தின் கைதான். தெருவோடு நடந்து கொண்டிருந்த அம்பலத்தின் காதிலே பரிமளா வீட்டு சப்தம் கேட்கவே அவர் வேகமாக உள்ளே நுழைந்தார். அவர் நுழைந்ததற்கும்-பரிமளா ஆபத்திலிருந்து விடுபடுவதற்கும் நேரம் மிகச் சரியாயிருந்தது. எங்கே சண்டை சச்சரவுகள் நடைபெற்றாலும், சந்தோஷ துக்க சமாச்சாரங்கள் நடைபெற்றாலும் அங்கே தனக்கே தலைமைஸ்தானம் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படும் பெரிய-மனிதராயிற்றே வெள்ளியம்பலம், ஆகையால் அவர் தாண்டவன் கையைத் தடுத்து நிறுத்தியதில் ஆச்சரியமில்லை.

சில சமயங்களில் கெட்டவர்கள் செய்யும் காரியங்கள்கூட நன்மையாகவே முடிந்து விடுகிறது. நமக்கென்ன என்று வெள்ளியம்பலம் போயிருந்தால், பரிமளாவின் உயிர் போயிருக்குமல்லவா? இன்னென்று — கெட்டவர்களின் செய்கை நன்மையை மின்னல் போலத் தோன்றச் செய்து, அந்த மின்னலில் இருந்தே, இடி-மழை-புயல்—பூகம்பம்--வரையிலே தீமைகளைப் பொழிந்துவிடவும் கூடும்.

அதே போன்ற ஒரு தீய சூழ்நிலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவது போலத்தான் அமைந்தது, பரிமளாவுக்கு வெள்ளியம்பலம் செய்த உதவி.

"என்ன தாண்டவம்— ஏனய்யா - கத்தியைத் தூக்கிக் கொண்டு பாய்கிறீர்?"

என்று அதட்டலாகக் கேட்டார் அம்பலம். தாண்டவன் கோபாவேசத்திலும்கூட அம்பலத்திற்குக் காட்டவேண்டிய மரியாதையைக் காட்டி மௌனமாக நின்றார்.

"ஆறுவது சினமய்யா-ஆறுவது சினம்! நீர் அரிவாளால் காரியத்தை முடிச்சுட்டு நாளைக்கு உம்மை ஜாமீனில் எடுக்கிறத்துக்கு, நானல்ல வாய்யா போய் அழணும்! ஏது ஊர்லகொஞ்சம்கூடமனுஷனை நிம்மதியா இருக்கவிட மாட்டீங்க போலிருக்கே! இப்ப என்னய்யா நடந்தது? ஏன் இப்படி புலிபோலப் பாய்ந்தீர்?"

தாண்டவன் பதில் சொல்லாமலேயே உட்கார்ந்தார்.

"என்னய்பா-ஒரு மனுஷன் கேட்கிறேன்: பதில் சொல்லாமல் வாயடைத்துப் போய் விட்டீர்!"

கணவன் பதில் சொல்லாததால் அம்பலத்திற்குக் கோபம் வந்துவிடக் கூடும் என்று பயந்த அஞ்சலை," நான் சொல்லுகிறேனுங்க!" என்று ஆரம்பித்தாள்.

"சொல்லு! சொல்லு!" என்று அம்பலமும் ஆவலாகக் கேட்டார்.

"ராத்திரி தூங்கிக்கிட்டு இருந்த என் பெண்ணை மோகினிப்பிசாசு, தூக்கிக் கொண்டு போய்ட்டுதுங்க—மகள் காலையிலேதான் திரும்பி வந்தா — அதை அவரு நம்பாம இப்படி துள்ளிக் குதிக்கிறரு!"

"மோகினிப் பிசாசு!"

"ஆமாங்க — அதான் அந்த கொல்லர் வீட்டுப் பெண்ணு, கன்னி கழியாமல் மோகினியா சுத்திக்கிட்டு நிக்குதே — அது தான்!"

"ஓகோ—அது ஏன், இந்தப் பெண்ணை தூக்கி கிட்டுப் போச்சு-ஆச்சரியமாஇருக்கே"

"இந்தப் பெண்ணு தானே பட்டுக் கோட்டை பெரிய பள்ளிக் கூடத்திலே படிக்கிற பெண்ணு?"

"ஆமாங்—இதுதான்! வேற ஏதுங்க; ஒண்ணே ஒண்ணு தான் கண்ணே கண்ணுன்னு! அதுக்கும் இப்படி ஆபத்து வரப்பாத்துச்சு!"

அம்பலத்திற்கு குழப்பம் ஆரம்பமாகி விட்டது. மோகினிப் பிசாசு மருங்கப் பள்ளத்துப் பக்கத்திலே சுற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அவர் நிறையக் கேள்விப் பட்டிருந்தாலும் கூட, அந்தப் பிசாசு வந்து இந்தப் பெண்ணை எப்படித் தூக்கிக் கொண்டு போயிருக்க முடியும் என்கிற சந்தேகம் அவருக்கு எழுந்தது.

அவர் பரிமளத்தைப் பார்த்து, உன் பெயர் என்னம்மா — என்று கேட்டார்- அவளும், கலங்கிய கண்களைத் துடைத்தபடி பரிமளம் என்று கூறினள் —

"அழாதே அம்மா! மோகினிப் பிசாசு உன்னைத் தூக்கிக் கொண்டு போகும் போது எத்தனை மணியிருக்கும்?"

"அதற்குத்தான் ஆறுமாதமாக அழுது கொண்டிருக்கிறேன் — அப்பா, ஒரு ரிஷ்ட் வாட்ச் வாங்கித் தரமாட்டேன் என்று கூறிவிட்டார். இப்போது எவ்வளவு சரியாக மணியைச்சொல்லியிருப்பேன்"

பரிமளாவுக்கு வெள்ளியம்பலம் என்றாலே எப்போதும் ஒரு வெறுப்பு உண்டு. அதுவும் இப்போது மோகினிப் பிசாசு பற்றிய விளக்கம் கேட்க ஆரம்பித்தது அவளுக்குப் பிடிக்கவேயில்லை. ஆகவே அம்பலத்தின் கேள்விகளுக்கு தாறுமாறாக பதில் சொல்வதென்று தீர்மானித்துக் கொண்டாள். அம்பலம், தன்னை அப்பாவின் கையிலிருந்து விடுவித்ததின் மூலம், இன்னும் ஏதாவது புதிய ஆபத்து அவரிடமிருந்தே ஏற்படக் கூடும் என்று பரிமளா பயந்தாள். அம்பலமும் கேள்விகளை அடுக்கினர்.

"மோகினிப் பிசாசு பார்வைக்கு எப்படியிருந்தது?"

"பிசாசு மாதிரியே இருந்தது ஆனல் மிகவும் நல்ல அழகு-"

"வயது என்ன இருக்கும் அதற்கு?"

"நான் அதைக்கேட்டேன்-- ஜாதகக் குறிப்பு அதன் அப்பா பெட்டியிலே இருக்கிறது — பார்த்துச் சொல்லுகிறேன் என்றது"

"ஓ—நீயும் அதோடு பேசினயா?"

"ஆமாம்—பேசினேன்!"

"அந்த பிசாசு என்னபாஷை பேசுகிறது!"

"பிசாசு பாஷை தெரியாதா? சமஸ்கிருதம்தான் பேசியது!"

"சமஸ்கிருதமா? உனக்குப் புரிந்ததா?"

"ஓ! அது பேசப்பேச பக்கத்திலே யாரோ மறைந்திருந்து தமிழிலே மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார்கள்—?"

"அது யார்? ஆணு பெண்ணு?"

"அதுதான் கண்ணுக்குத் தெரியவில்லையே — பேசியதிலிருந்து பெண் என்றும், குரலிலிருந்து ஆண் என்றும் தீர்மானித்துக் கொண்டேன்."

"ஆமாம், பிசாசு உன்னை ஏன் தூக்கிக் கொண்டு போனதாம்?"

"இதுமாதிரி எல்லாம் நட... கத்தான்!"

"குறும்புக்காரிதான் ... ஆமாம்-கொல்லர் வீட்டு... பெண்தானே அந்த மோகினி... அதுக்கிட்ட நீ கேட்டிருக்... லாமே; அவுங்க அப்பா-தங்க... தை எல்லாம் எங்கே புதைத்... வச்சார் என்று!"

"அதையும் கேட்டேன்-பு... லும் சொல்லிற்று!"

"என்ன சொன்னது? என்... சொன்னது?"

"அவளுடைய அப்... புதைத்த தங்கம் இருக்குமி... தை அவள் சொல்லும்போது... ஆச்சரியகரமாக என் காதுக... அடைத்துப் போய்விட்ட... உடனே விழித்துக் கொ... டேன், எனக்குப் பிரக்... வந்துவிட்டது!"

"அடாஅடா! அதையல்ல... நீ கேட்டிருக்க வேண்டும்... அது சரி — அந்தப் பிசா... உன்னை தூக்கிக்கொண்... போன இடம் எதம்மா?"

"மனோராவிற்குப் போ... பாதையிலே இருக்கிற ... பெரிய மதகு, அங்கேதா... நான் இருப்பதாக உணர்ந்தே... கண் விழித்துப் பார்த்தபோ...

வெள்ளியம்பலத்திற்குப் ... மளாவின் பேச்சிலே சி... நம்பிக்கை ஏற்பட்டுவிட்... மோகினிப் பிசாசு இப்... யெல்லாம் செய்யக்கூடும் ... றும், அத்தகைய பிசாசு ம... கப் பள்ளத்து வட்டா... களிலே அலைந்து கொண்டி... கிறது என்றும் நம்புகிற... களுக்கு பரிமளாவின் பே... உண்மையாகத் தானே ... யும். ஆகவே அம்பலம், தா... வனை சமாதானப் படுத்தி...

"நீர் ஒன்றும் மகளைப்... தப்பாக நினைக்காதீர் அ... மோகினிப் பிசாசு அ... விஷயம்தான் நாம் கே... பட்டிருக்கிறோமே; தீர வி... காமெ கத்தியைத் தீட்டிப்... வதிலே என்னய்யா பு... யம்?" என்று கொஞ்சம்... சாரமாகவே சொன்... அம்பலம்.

"எனக்குஎன்னமோ பே... நம்பிக்கையில்லை! ப...

ண்ணு அது — ஏதாவது ால்லி தப்பிச்சுக்கப்பாக் து!—அதனுடைய நடை டை பாவனைகளை நான் சில ளாப் பாத்து கிட்டுத்தான் றேன் — எனக்கென்னமோ தேகந்தான்!''

"அட முட்டாள் மனுஷா ப்படியேசந்தேகமிருந்தாலும் தை வெளியில் சொல்லக் டாதய்யா! சந்தேக நிவர்த் யே ஆகாமல்சண்டமாருதமா ம்பினீர்னு, ஊர் காரித் ப்புமய்யா! நான் ஊருக்குப் ரிய மனுஷன்—நானே நம்பு றேன், உமது மகள் பேச்சை! என்னமோ நெருப்பு மாதிரி திக்கிறீரே!''

"மோகினிப் பிசாசு, பெரிய தகடிக்குத் தூக்கிட்டுப் ாச்சுன்னு சொல்லுதே; ஒரு ள்வி கேட்கிறேன்! பதில் ால்லுமா?''

"என்ன கேட்கிறீர்,கேளும்?''

"பெரிய மதகடியில் இருக் ் ஒரு முக்கியமான செடி ாடியின் பெயரைச் சொல் ட்டும்—நான் போய் சரி ர்த்து, இதன் பேச்சை நம்பு றேன்'' என்று முடித்தார் ண்டவன்.

"ஏன் பரிமளம்! உங்கஅப்பா ட்கிறது நியாயம் தானே, கடியில் தானே பிசாசு ன்னை தூங்கவைத்தது — ங்கேயுள்ள ஒரு முக்கிய ன செடி கொடியைச் ால்லேன் — அப்பாவின் சங் கம் தீரட்டும்!'' என்றார் ம்பலம்.

"அந்த ஆபத்தான நேரத்தில் ன் அதையெல்லாம் பார்த்து பகமா வைத்திருக்கிறேன்'' ன்று அவள் சொல்லிக் ாண்டிருக்கும் போதே, டீரென அவளுக்கு ஒரு னவு வந்தது. அதுதான் ந்த மதகடியில் பாம்புபோல் ந்து அவர்களை பயமுறுத்திய ண்டைக்கொடி! பரிமளத் கு புதிய தெம்பு ஏற் டது.

"சொல்லுகிறேன்--ஞாபகம் துவிட்டது—அங்கே பிரண் டைக் கொடி நிறைய இருக் து'' என்றாள், தாண்ட னுக்கு சிறிது தயக்கம் ந்தது; பேசுவதற்கு!

"என்னய்யா—இனி என்ன தேகம்?'' என்றார் கேலியாக ம்பலம்.

"பிரண்டைக்கொடி — சரி; கதான் சாட்சி-வாங்க தயவு ய்து என்னோட-உங்களுக்கு ேராகவே பார்க்கிறேன். ண்டைக்கொடி இருக்கிறதா ன்று! அப்படி இல்லாவிட் ல் மகள் என்றும் பார்க் மல் பிணமாக்கிவிடுறேன்— க சாட்சி! வாங்க!'' என்று டித்துக் கிளம்பினர் தாண்ட ன். வெள்ளியம் பலமும், ண்டவனுடன் புறப்பட் ர்.

பரிமளாவுக்கு பயமெல்லாம் போய்விட்டது. அப்பா, அங்கு போய் பிரண்டைக்கொடியைக் கட்டாயம் பார்ப்பார்—தான் சொன்ன பொய்யை எல்லாம் நம்பிவிடுவார்—என்று தற்காலிகமாக ஆறுதலடைந்து, பாம்பு போல் வந்து பயமுறுத்திய அந்தப் பூவரசு இலைக்கும், பிரண்டைக் கொடிக்கும் வாழ்த்து சொல்லிக் கொண்டாள் தனக்குள்ளாகவே!

தாண்டவனும், வெள்ளியம்பலமும், பரிமளம் குறிப்பிட்ட மதகு நோக்கி நடந்தார்கள்.

பரிமளத்தின் விஷயத்திலே வெள்ளியம்பலத்திற்கு ஏன் இவ்வளவு அக்கரை பிறந்தது என்று அவருக்கேதெரியவில்லை. பரிமளா கூறும் மோகினிப் பிசாசு—தாண்டவன் கூறும் கள்ளக் காதலன்—இந்த இரண்டில் எது சரி? என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை மட்டும் அம்பலத்தின் மனதிலே அலை மோதிக் கிளம்பியது — மோகினிப் பிசாசு உண்மையாயிருக்கும் பட்சத்தில் யாராவது மந்திரவாதிகளைக் கொண்டு அதைக்கட்டி, அதன் மூலம் தங்கம் புதைக்கப்பட்ட இடத்தை தெரிந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை பிறந்தது அவருக்கு! அல்லது, பரிமளத்திற்கு யாரோ ஒரு கள்ளக் காதலன் இருப்பது உண்மையானால், அந்தக் காதலன் முதல் நாள் இரவு தான் கோயிலிலே சந்தித்து ஓட்டம் பிடித்த காதலனுயிருந்தால். அவன் மூலமும் தங்கம் இருக்கும் இடத்தைஅறிந்து கொள்ளலாம் — "அதோ அந்த மாமரத்தடியில்தான் தங்கத்தைப் புதைத்தது'' என்ற வாசகத்தைக் கூறியது அவர் சந்தித்த அந்தக் காதலன் தானே! ஒருவேளை அவனேபரிமளாவின் கள்ளக் காதலனுக இருந்தால்? இப்படி எல்லாம் யோசனை செய்து கொண்டு, அம்பலம் தாண்டவனுடன் மதகுப் பக்கம் வந்தார்—தாண்டவன் மதகடியை ஆவலாகப் பார்த்தார்—பரிமளா குறிப்பிட்ட பிரண்டைக் கொடி அங்கேயிருந்தது.

"பார்த்தீரா? பரிமளம்சொன்னது உண்மைதான்!'' என்று கூச்சலிட்டார் வெள்ளியம்பலம்.

பிரண்டைக் கொடிக்கும் பக்கத்திலே கொஞ்ச தூரத்தில் ஒரு செருப்புமட்டும் கிடந்தது. இருவரின் கண்களும் அந்த செருப்பின் மீது பாய்ந்தன. அம்பலம் அந்த செருப்பை உற்றுப் பார்த்தார். அவருக்கு ஒருசரியானஉண்மைகிடைத்துவிட்டது. அவர் அந்த உண்மையை தாண்டவனிடம்வெளியிடவில்லை. மதகடியில கிடந்த செருப்பும், முதல்இரவு, கோயிலடியில் கிடந்த செருப்பும் ஒரு ஜோடி! இரண்டும் ஒருவனுடையது! அம்பலம் துரத்தும் போது ஓடிய வேகத்தில் துறை விட்டுச் சென்ற செருப்பைத் தான் முதல் நாள் இரவு அம்பலம் எடுத்து வைத்துக் கொண்டார். இப்போது அதனுடைய ஜோடி கிடைத்தது! ஆம்—பரிமளாவின் காதலன் தான் அவன்—பரிமளாவைப் பிடித்தால் அவனைப் பிடித்து விடலாம்-அவன் மூலம் தங்கம் புதைக்கப்பட்ட இடத்தை கண்டு பிடித்து விடலாம் என்று முடிவு கட்டிக் கொண்டு மௌனமாக நின்றார் அம்பலம். எப்படியாவது பரிமளாவை தன் வீட்டிற்கு தூக்கி வந்து ரகசியத்தை அறிய வேண்டுமென்ற தீர்மானத்துடன் நடக்க ஆரம்பித்தார் — தாண்டவன் உள்ளமும் போர்க்களமாகி விட்டது. யாரோஒருஆடவனுடன்தான் தன் மகள் அந்த இரவைக் கழித்திருக்க வேண்டுமென்று முடிவு கட்டிக் கொண்டார். அநாதையாகக் கிடந்த அந்த செருப்பைக் கையிலே எடுத்துக் கொண்டார்.



"என்னய்யா—பரதன் மாதிரி புறப்பட்டு விட்டீர், பாதுகையைத் தூக்கிக் கொண்டு!''என்று கிண்டல்செய்தார் அம்பலம். கேலியை ரசிக்கும் நிலையில் தாண்டவன் இல்லை. அம்பலந்தான் என்ன; கேலி செய்தாரே தவிர — அவர்

[12 பக்கம்]

Filmed as bound

# கோயிலில்லா ஊரில் குடியிருப்போம்!

[ சுரதா ]

மேகலை அசைய; நீழல் அசைய—இரு
செவ்வாழைத்தண்டு தொடை அசைய—முத்து
மாலை அசைய; வளை அசைய — ரச
மாம்பழக் கன்னத்தின் மேடசைய—நெய்யும்
நூலிடை பூங்கொடி போலசைய—கலை
நெஞ்சில், தமிழின் நினைவசைய — இரு
காலில் படிந்த சிலம் பசைய — கடல்
கண்ணசைய; வஞ்சி வீடுவந்தாள்.

"மந்திரமாவது நீறு" என்னும்—தே
வாரப்பதிகத்தைப் பாடிக் கொண்டே — அங்கு
வந்தஇளைஞனைக் கண்ட உடன் — 'அத்தான்
வா' என்று வஞ்சி அழைக்க லுற்றாள் — "அடி
இந்தா கொடிமுல்லை. சூடிக்கொண்டு — என்னை
எச்சில் படுத்துஉன் முத்தத்தினால்!"—என்று,
சந்தனம் வீட்டில் இருக்கையிலே — வெந்த
சாம்பலைப் பூசுவோன் கெஞ்சி நின்றான்.

பெய்யும் மழைபோல் உதவி செய்யும் — மங்கை
பேசாதிருந்திட; மீண்டும் அவன்—" துயர்
செய்யுதுகாதல் பருவம் என்னை; — விழி
தூங்க மறுக்குது ராத்திரியில்! — அடி,
வெய்யில் அடிக்கையில் வேலை தவா—குடை
வீட்டில் இருந்துதான் என்னபயன்? — நான்
கொய்யும் கனிதன்னை எத்தனை நாள் — வீட்டுச்
கொம்பில்இருக்க விடுவ" தென்றான்.

"ஆவணி மாதத்தில் உன் கழுத்தில் — மஞ்சள்
ஆவாரம் பூத்தாலி கட்டுகின்றேன் — பின்பு
கோவில்குளம் எங்கும் போய்வரலாம் — இன்று
கொஞ்சம் பசியைத் தணித்திடடி! — பச்சை
மாவிலை போல் நிற பசுங்கிளியே! — வைர
மாலை தரும் அழகின் ஒளியே! — எந்தன்
காவிச் சிவப்பு உதட்டினிலே — கட்டிக்
கற்கண்டு ஒற்றடம் தந்திடடி"

முத்தன் இதுபோல் மொழிந்திடவே — " வஞ்சி
வேடிக்கையாய் உரை பாடிக்கொண்டு — இங்கு
எத்தனை மரங்கள் நிற்கின்றன? — இதை
எண்ணி சரியாகச் சொல்லு" என்றாள்—அவன்,
மொத்தக் கணக்கிட்டு, முப்ப தென்றான்—அதை,
வஞ்சி மறுத்து, சிரித்தபடி — " சரி
அத்தோடு உன்னையும் சேர்த்துக் கணக்—கு
அளிக்கத் தவறினை, அத்தான்!" என்றாள்.

" அப்படி எனில் நான் ஓர்மரமா?"—என்று
ஆத்திரத்தோடவன் கேட்கையிலே—அந்த
செப்புச் சிலை நிகர் சுந்தரியாள் – தன்
சேல் விழியை அவன் மேல் திருப்பி–அத்தான்
இப்படிவா என்றாள். வந்து நின்றான். –' கல்வி
அற்றவனும் மரம் போன்றவனே! – இது,
இப்போது நான் சொல்லும் வார்த்தையல்ல – ஔவை
எடுத்துரைத்திடும் பட்டப் பெயர்!'

எட்டிப்பழம்போல் அழகிருந்தும்–கல்வி
இல்லாவிடில், மேன்மை இல்லைஅத்தான்–செப்புத்
தட்டுக்குப் பொன்ஒளி வந்திடுமோ? – சிலை
செய்திட, செங்கல் உதவிடுமோ? – உயிர்
விட்டுப் பிரிந்தாலும் விட்டுவிடாப் – புகழ்
உண்டாக்கும் கல்வி கற்றுவரின் – என்னைத்
தொட்டு சுகிக்கலாம்" என்றுரைத்தாள் – " சரி
சென்றுவருகிறேன் என்று சென்றான்.

சைத்ரம் என்னும் ஊரடைந்து—அங்கு
சாலியனூர் என்னும் ஆசானிடம்—ஒரு
ஐந்து வருடம் தொடர்ந்தபடி—புது
அறிவு புகட்டும் மதுரைத்தமிழ்—கற்று,
நைந்தநிலை நீங்கித் திருந்தோன்—மெச்சும்
நல்லஅறிஞனாய் மாறிவிட்டான்—இதைப்
பைந்தமிழ்க் காதலி கேள்விப்பட்டாள்—அவள்
பாராட்டை, முத்தனும் கேள்விப்பட்டான்.

"ஆட்டுத் தலைபோன்ற கொண்டையிலே—உயிர்
அற்றகுறிஞ்சி மலர் அணிந்து—தமிழ்ப்
பாட்டுப் படித்திடும் பெண்அமுதே!—புதுப்
பச்சைக் குருவியே! பால்நிலவே!—கற்றுக்
கேட்டுத்தெளிந்து புலமை பெற்றேன்—இனி
கோவை இதழ்தர அட்டியுண்டோ?"—என்று,
தீட்டிய ஓலையை முன்அனுப்பி—கொம்புத்
தேன்முத்தம் வைத்திடப் பின்னேவந்தான்.

வாசிக்கச்சென்று திரும்பி வந்த—அறி
வாளனைக் கண்டதும், வண்ணக்கொடி—காதல்
ஆசையுடன்ஓடி 'அத்தான்' என்றாள்—அவன்,
ஆனந்த ஓசையால் 'அன்பே' என்றான் — பின்னர்
"மாசில்வீணை என்று, பாடு" என்றான்—ஏன்?
மந்திர மாவதென்று நகைத்தாள்—சேதி
பேசத் தொடங்கினள், பெண் வடிவம்—பேச்சைப்
பின்னத் தொடங்கினன், பேரறிஞன்!

"சின்ன விழிதனில் விண்ணழகு—காட்டும்
சித்திரமே கல்விப் பத்திரமே!—நீ
என்னை அறிவாளி ஆக்கிவிட்டாய்—நானும்
என் அறியாமையைப் போக்கிவிட்டேன்—அடி
உன்னை மனமார வாழ்த்துகின்றேன்—நாட்டில்,
உள்ளகொடுமையை வீழ்த்துகின்றேன்—இனி,
அன்னந்தண்ணீர் ஏதும் வேண்டாமடி—நீ
அருகில் இருக்கையி லேமயிலே!

வள்ளுவன் என்கின்ற பேரறிஞன்—தந்த
வாழ்க்கை முறைநூல் இருக்கையிலே–நம்மைக்
கொள்ளை அடித்திடும் ஆரியர்கள்–இங்கு
கூறும் மனுநூலைப் போற்றுகின்றோம்–சிறு
எள்ளுப்பூ மூக்கு அமைந்தவளே!—இங்கு
எத்தனையோ மலர் பூத்திருக்க–ஒரு
கள்ளிப்பூ மீதுகை நீட்டுவதோ -கருங்
கூந்தலுக்கு மலர் தேடுபவர்?

நல்லோர்கள் கூறிய தெய்வத்திற்கு — ஒரு
நாடில்லை; வீடில்லை; ரூபமில்லை; — மக்கள்;
புல்லர் புராணத்தை நம்பியதால் — பாம்புப்
புற்றுகூட கோயில் ஆயிற்றடி — புது
அல்லிமலரே! நமக்கு மணம் — இங்கு
ஆயின பின்னர் உடனடியாய் — கோயில்
இல்லாத ஊரில் குடியிருப்போம் — என்றான்.
இன்பப்பதுமை தலை அசைத்தாள்.

சந்நிதி முன்சென்று, நந்திதனைப் – பார்த்து
சற்றேவிலகி இருக்கச் சொன்ன – பக்த
நந்தனார்போலக் கல் தெய்வங்களை – நம்
நாட்டினை விட்டே விலக்கிடுவோம் – அடி,
கந்த புராணத்தில் தீயிடுவோம் – புத்தன்
கொள்கையை எங்கும் பரப்பிடுவோம் – நம்மைத்
தொந்தரவு செய்யும் சாதிமதங்—களை,
செத்து மடிந்திடச் செய்திடுவோம்.


ராவண காவியம் ஒன்றெழுதி – அதில்
ராமன் அயோக்கியன் என்றுரைப்போம் – வான
தேவர்களைத் திரு வள்ளுவ நாயனார்
சொன்னதுபோலக் கயவர் என்போம் – பழ
கோவிந்த பக்தர்கள் செய்துவரும் – கதா
காலக்ஷேபத்தை ஒழிக்காவிடில் – தலை
சிவிய முண்டம்போல் செத்துவிடும் – தமிழ்
சங்கத்து ஏட்டுச் சரித்திரங்கள்!

ஒத்தஅழகு உனக் கிருந்தும் – அன்று
ஒதா திருந்தனை; நான் மறுத்தேன் – இன்றோ,
முத்தமிழ் கற்றுத் தெளிவடைந்து – நீ
முன்னேற்ற எண்ணம் படைத்துவிட்டாய்! – கடல்
சுற்றும் உலகில் நீ பேரறிஞன் – நான்
கற்றவன் காதலி ஆகிவிட்டேன்! – இதழ்
முத்திரை இட்டு மகிழ்ந்திடுவோம் – என்று
மங்கை முடித்தனள் பேச்சுதனை.

"முல்லைக்கு ஏதடி உன்சிரிப்பு?–கடல்
முத்துக்கு ஏதடி உன்மதிப்பு?– வான
வில்லுக்கு ஏதடி உன்அழகு?–கெண்டை
மீனுக்கு ஏதடி உன் துடிப்பு?–தமிழ்ச்
சொல்லுக்கு தான்உண்டோ உன் இனிமை!–என்று
சொல்லி முடிக்கும் சமயத்திலே–அவள்,
கொல்லி மலைமார்பில் சாய்ந்துவிட்டாள்––அன்னோன்,
கொஞ்சத் தொடங்கினன் வஞ்சிதனை.

சித்திரக் கன்னத்தில் முத்தமிட்டான்––புரு
சத்தமிடுதல் போல் சத்தமிட்டாள்––மார்பில்
முத்து வடங்கள் அழுந்து தென்றாள்––கிளி
மூக்குநகம் காயம் செய்யுதென்றான்––சோழன்
கத்தி வெளிச்சத்தைப் போலிருக்கும்––அவள்
கண்ணின் வெளிச்சத்தைப் பார்த்தபடி––பெண்ணே!
கொத்தி வருத்திடும் காதல்பசி––மட்டும்
கூட்டு முறையில்தான் தீருமென்றான்.

ஈரப்பனிஎன்னை வாட்டு தென்றாள்–மங்கை
இன்பசரீரத்தைப் போர்த்திக் கொண்டான்––அவள்,
ஊரேஉறங்குது என்று சொன்னாள்––அவன்,
ஓராயிரமுத்தம் வேண்டு மென்றான்.–அவன்,
கூரானகண்ணை சிவக்க வைத்தாள்–அவள்
கோவை உதட்டை வெளுக்க வைத்தான்—நோய்
தீராத சந்திரன் தொங்கையிலே–நோய்..
தீர்த்தனர், தூங்கினர், தோட்டத்திலே!




# விதியும் மதியும்

*

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

'நல்லது, கெட்டது எல்லாவற்றுக்கும் எங்கள் வீட்டுப் பாட்டி 'விதி, விதி' என்று சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த பொல்லாத விதியைப் பற்றி என்க்கு ஒன்றுமே புரியவில்லை' என்று குழம்பிய மனதுடன் எழுதியிருக்கிறான் எட்டுக்குடித் தம்பி சட்டநாதன்.

விதி என்பது ஒரு சதிச் சொல்! நாமே நம்மை ஏமாற்றிக் கொள்ளும் மாய வார்த்தை! அப்படி வாதத்திற்காக விதியை நம்பினாலகூட, அது அழிக்க முடியாததல்ல; அத்துடன் போராட முடியும்; அதை மாற்ற முடியும்; வெற்றியும் பெற முடியும்; எல்லாம் உழைப்பின் வலிமையில் இருக்கிறது! கீழே தம்பியின் கதை ஒன்று இருக்கிறது. படியுங்கள்; தானாகப் புரியும்.

★

அலுவலகத்தில் உட்கார்ந்திருந்தேன்.

"வணக்கம், சார்" என்ற குரல் கேட்டது. தலை நிமிர்ந்து பார்த்தேன். தம்பி ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

"உட்கார், தம்பி" என்றேன். உட்கார்ந்தான். உடனேயே பேசவும் ஆரம்பித்தான்.

"சார். நான் ஏன் வந்தேன் தெரியுமா? உங்கள் 'பிறைவான'த்தில் என்னைப் பற்றி எழுத வேண்டும்..."

எனக்கு சிரிப்பு வந்தது. நல்ல வேளை, அடக்கிக் கொண்டேன். "ஏன் தம்பி? எதற்கு?" என்று கேட்டேன்.

"எதற்கா? நான் சாதாரண தம்பியில்லே சார், விதியை வென்றவன்...ஆமாம்!"

"அப்படியா? ...எப்படி?" நான் அவன் வாயைக் கிண்டினேன்.

"கேளுங்கள் சார்! நான் யாரென்று சொல்ல[illegible]வில்லையே; சென்னையில் இல[illegible]ந்து கிடக்கிறார்களே பல[illegible]காரர்கள், அவர்களில் ஒருவர் என் அப்பா. நாராயண முதலியார். நான் மகன் .பெயர் மோகன். பார்த்தாலே தெரியுமே, நான்ஒரு பள்ளிக்கூட மாணவன். புத்தகங்களின் கனம் கொஞ்சம்தான் இருக்கும் என் கையில். ஆனால் உடம்பில் கிடந்த நகைகளின் கனம் — இரண்டு பங்கிருக்கும். மூன்று மோதிரம்; காதில் கடுக்கன்; கழுத்தில் சங்கிலி; கையில் செயின்! இவைதவிர சில்க் உடைதான்; சிங்கார பூட்ஸ் தான்! இந்த அலங்காரங்களில் என் அப்பாவுக்கு கொள்ளை ஆசை; அம்மாவுக்குக் கேட்க வேண்டுமா?

ஒருநாள் பள்ளிக்கூடம் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பா பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்.

"அப்பா......அப்பா..." என்றேன்.

"ஏண்டா கண்ணு?" என்றார் அப்பா.

"அப்பா ... ஒரு சந்தேகம்ப்பா !..."

"என்ன சந்தேகம்? கூட்டல் கணக்கிலேயா? ஆறு, ஆவன்னா விலேயா?"

"அதில்லேப்பா! எனக்கு மட்டும் இத்தனை நகைகள்; சட்டைகள் எல்லாம் இருக்கே, நம்ப முத்தனுக்கு மட்டும் ஒன்னுமே யில்லையே, ஏம்பா?..."

"இவ்வளவுதானா? என்னமோன்னு பயந்தேன். அது அவன் விதி ..."

"விதியா? அப்படின்னா...?"

"அப்படின்னா? கடவுள் அவன் தலையிலே எழுதின எழுத்து ... அவன் தலைவிதி ... அந்த விதிப்படிதான் எல்லாம் நடக்கும். அவனுக்கு கிடைப்பதுதான் கிடைக்கும்"

"அப்பா! அப்படின்னா அந்த விதியை மாத்தவே முடியாதா?"

"ஆண்டவனாலே கூட முடியாது!...ம்...உனக்கேன் இந்த கவலை? மணியாச்சு; புறப்படு"- அப்பா பேச்சை முடித்தார். நான் வாசலுக்கு வந்தேன். ரிக்ஷா தயாராக நின்றது. இழுக்க வேண்டிய மாடும்— அவன்தான் முத்தனும் தயாராக நின்றான். நான் ஏறிக் கொண்டேன்.வண்டிநகர்ந்தது.

ஃ ஃ ஃ

"முத்தா...முத்தா..."— நான் கூப்பிட்டேன்.

"என்னங்க....தம்பீ..." - முத்தன் கேட்டான்.

"ஏன் முத்தா? உன் விதியை மாத்திக்கயேன்..." என்றேன் நான்.

"விதியா? மாத்திக்கிறதா? எனக்கு ஒன்றும் புரியாது தம்பீ!"- முத்தன் இத்துடன் நிறுத்திக் கொண்டான். பள்ளிக்கூடம் வந்துவிட்டது. நான் உள்ளே போனேன். அன்று முழுதும் எனக்கு வாத்தியாரின் மேலேயே கவனமில்லை. அந்த முத்தனின் விதியின் மேலேயே கவனம். 'பாவம்' முத்தன்! மாடுபோல் உழைக்கிறான்; வண்டி இழுக்கிறான்; என்னென்ன வேலைகள் செய்கிறான்! அவனுக்கு மட்டும் கந்தை உடைதானா? ஐயோ!... ...ஐயோ! இதற்கெல்லாம் காரணம்? அந்தப் பொல்லாத விதிதானே!" - இப்படி எண்ணினேன்; ஒரு முடிவும் செய்தேன்.

பள்ளிக்கூடம் முடிந்தது. வீட்டுக்குத் திரும்பினேன். முத்தன் ரிக்ஷாவை நிறுத்தினான். நான் இறங்கினேன். அவன் கையில் ஒரு பொட்டணத்தை வைத்தேன். "முத்தா! இதற்குள் உன் விதியை மாத்தும் மருந்திருக்கு! மாத்திக்கோ! சரிதானே!" என்று சொன்னேன். உள்ளே ஓடினேன்.

சில நிமிடங்கள் சென்றன. வாசலிலிருந்து ஒரு பயங்கரக் கூச்சல்- 'ஐயோ' என்ற அலறல் கேட்டது. நான் திடுக்கிட்டேன். வாசலுக்குஓடிவந்தேன். ஐயோ, என்ன கோரம்! கண்களிலே கோபம் - கையிலே ஒரு கம்பு—இப்படி அப்பா நின்று கொண்டிருந்தார். கம்பு முத்தனின் உடம்பை 'பளார் பளார்' என்று பதம் பார்த்துக் கொண்டிருந்தது. முத்தன் 'ஓ' வென்று அழுதான். கீழே நான் கொடுத்த பொட்டணம்-அதில் இருந்த என் கழுத்துச் சங்கிலி கிடந்தது. எனக்கு விஷயம் புரிந்தது. அப்பாவோ 'திருட்டு ராஸ்கல்'என்று உறுமியபடியே முத்தனை அடித்துக் கொண்டிருந்தார்.

எனக்கு உடல் நடுங்கியது. அந்த மாதிரி கோபத்தையும்-- அடியையும்-அலறலையும் நான் இதற்கு முன் கேட்டதில்லை. அதற்குள் அப்பா முத்தனை வெளியே விரட்டினார். கீழே கிடந்த சங்கிலியை எடுத்தார். உள்ளேவந்தார். அவர்முகத்தை பார்க்கவே எனக்குப் பயமாக

[10-ம் பக்கம்]

## முத்துவும் செல்வியும்

### 4. பக்தியா? பட்சணமா?

பிள்ளையார்; லட்சுமி; அனுமார் —இப்படி ஆண்டவனின் 'அகராதி'யிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட இரண்டொரு கடவுள்களின் படங்கள்; அவைகளின் மேல் பூக்கள்; எதிரே சூடன்; சாம்பராணி; இன்னும் என்னன்னவோ! எல்லாவற்றையும் விட முக்கியமாக, எதிரே நமது முத்துவும் தங்கை செல்வியும்! அதுவும் எப்படித் தெரியுமா? கடவுள்களின் படங்களைப் பார்த்துக் கொண்டு நல்ல பிள்ளைகளைப் போல நின்று கொண்டிருந்தார்கள்.

அடுப்பங்கரையில் வேலையாயிருந்த அம்மா வெளியே வந்தார்கள். தற்செயலாக இந்தக் காட்சியைப் பார்த்தார்கள்.

"அடடா! குழந்தைகள் என்ன புத்திசாலிகளாகி விட்டன! என் செல்வங்களே! சாமியிடம் என்ன வேண்டுகிறீர்கள்? பரிட்சையிலே பாஸ் செய்யவேனும் என்றா?—ம்—அப்படித்தானே?" என்று செல்லம் கொஞ்சினார்கள். குழந்தைகளிடம் வந்தார்கள்.

முத்து அம்மாவைப் பார்த்தான். "இல்லே அம்மா! நைவேத்தியம் செய்வதற்கு முன்னே பட்சணங்களை சாப்பிட்டா, சாமி ஆகாயத்திலே தூக்கிக்கிட்டு போயி, ஏழுகடலையும் தாண்டி, பெரிய காட்டிலே விட்டுடும்னு சொன்னியே, எங்களை எப்படித் தூக்கிக் கிட்டுப் போகும்னு பார்த்துக் கிட்டிருக்கோம்" என்றான்.

அதற்குள் இடை மறித்தது செல்வி. "ஆமாம்மா! ஆகாயத்திலேருந்து நம்ப வீடெல்லாம் பார்க்கணும்னு எனக்கும் ஆசையாயிருக்கு. ஆனால், பாரும்பா, இந்த சாமி இன்னும் தூக்க மாட்டேங்குதே" என்றது சலிப்பாக.

அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. கீழே பார்த்தார்கள். படங்களுக்கு முன்னால் வைத்திருந்த பட்சணத் தட்டு காலியாக இருந்தது. விஷயமும் புரிந்தது. கோபமும் வந்தது. அதிகப்பிரசங்கிகளே! யாரைக் கேட்டுக் கொண்டு இதெல்லாம் சாப்பிட்டீர்கள்?" என்று இ[illegible]ர்கள்.

முத்துவும் செல்வியும் [illegible]றார்கள்? "ஆண்டவன் ஆகாச[illegible]னால், அம்மாவின் கோபம் [illegible] கொண்[illegible]ட்டம் பிடி[illegible] [illegible]ங்கே கவனிக்கப் போவி[illegible] தூக்கிப் போவதற்கு முன் [illegible]கிறதே!" என்று சொல்லிக் [illegible]ர்!

# கண்ணம்மாவின் கனவு!

[ உருவகச் சித்திரம் ]

அந்திநேரம்! தங்கக் கதிரவன் கோபுரத்துக் கலசங்களை ஒளிவிளக்குகளாக்கிக் கொண்டிருந்தது. உச்சிமாடங்களை இல்லமாக்கிக்கொண்ட வண்ணப் புறாக்கள், நடன சிங்காரியின் இடையொத்த கழுத்துக்களை வில்லாக வளைத்து வீணைக்குரல் ஊதி விளையாடின. ஊர்வசி கண்ணம்மா, ஊரின் ஒதுப்புறத்து உப்பரிகை மீதிருந்து கண்ணுக்கு அஞ்சனம் தீட்டிக் கொண்டிருந்தாள். கயல் விழிதான், தன் காதற் கொழுநனின் அன்பைச் சுண்டியிழுக்கும் தூண்டில்முள் என்று அந்தஎழில் மாது எண்ணியிருந்தாள் போலும்! அவ்வளவுதான்! அந்த அழகிக்கு அழகு சேர்த்த அவயவங்கள் பொறுமை இழந்தன.

"பெண்ணே, உனக்கு ஆரணங்குப் பட்டம் வாங்கித் தந்தது கண்ணேதான் என்று நினைக்கிறாய்? கண்ணுக்கு மட்டும் மின்னும் கருப்பு மை தீட்டுகிறாயேடி, முல்லைநிகர்த்த இந்த முத்துப்பல் வரிசைதான் உன் மோகன சுந்தரனை மையலில் ஆழ்த்தியது என்பதை மறந்துவிடாதே" என்று பல்வரிசை சீறிவிழுந்தது.

"செதுக்கி வைத்த சிலைமூக்கு என்றுனே உன் சித்தம் கவர்ந்த சிங்காரரூபன்—அதை நெஞ்சிலிறுத்த தவறிவிடா தேடி வஞ்சகப் பெண்ணே"—மூக்கு முறைத்தது இப்படி.

செவ்விதழ்கள் என்ன சுரணையற்றவைகளா? "முத்துப் பல்வரிசையாம் மோகனப் புன்னகையாம் சித்திரமூக்காம், துடித்துடித்துக் குதிக்கின்றனவே உதவாக்கரை உறுப்புகள்! கண்ணம்மா, செங்கில் சிக்கிய எள்ளாக உன் மணவாளனின் வாயிலே சிக்கித் தவித்தது நான் தானடி, நன்றிகெட்டவளே, காதல், சுவைதந்தது யாரால் என்று கேட்டுப்பார் உன் கண்ணாளனை. மாதுளைமுத்து என்றான், மணவீசும் ரோஜா என்றான் என்னுடைய நிறத்திற்கு உதாரணமாக! சண்டாளப் பெண்ணே அதையெல்லாம் மறந்து என்னை திண்டாடவா விடுகிறாய்! எனக்கொரு பாதுகாப்பு உண்டா? கண்காணிப்பு உண்டா?"—உதடுகள் இவ்வாறு உறுமின.

கூந்தலோ, "உருவத்தில் குதிரைச் சவுக்கு நான். நடை பயிலும் பாவைக்கு ஒயில்தரும் சக்தி என்னிடம் தானிருக்கிறது. இடக்கையை கருக்கு அரிவாளாக்கி மணிக்கட்டின் அணைப்பிலே உன்னைப் புரளவிடுகிறானே உனது ஆவித்துணைவன், அப்போது உன்முகம் மலர்வது எதனால்? அந்தக் கோதைநாயகன் கூந்தலைக் கோதுவதின் காரணம் தானே அந்த மலர்ச்சி! கூறு பெண்ணே கூறு!" என்று ஆர்ப்பரித்தது.

கன்னங்கள் சிவந்து குங்குமத்தைப் பழித்தன. "அமைப்பில் ஆமைஓடு! காதல் வெள்ளத்தை தடுத்து நிற்கும் கல்லணைகளை தகர்த்தெறியும் சம்மட்டி இந்தக் கன்னங்கள். கவிஞறும் சன்னமில்லா மங்கை, ஒச்சம் காட்டும் ஓவியம்! உன் வசீகரத்திற்கு ஜீவநாடி நான்"—கன்னங்கள் கர்ஜித்தன.

புருவத்தின் நெறிப்பால், கண்ணம்மாவின் நெற்றியில் ரேகை படிந்தது. "சித்திரப்பாவாய், உன் ஆசையை அம்பாக்கி குறிவைக்குங்கால் உனக்கு வில்லாக வளைந்து கொடுப்பது யாரென்று நினைக்கிறாய்? செவ்விதழ்களுமல்ல; சித்திரமூக்குமல்ல! வில்லடி மாதே புருவமில்!—புருவங்களின்புகார் இவை.

மார்பகம் விம்மிப் புடைத்தது. சலவைக்கல் சிலையாக்கி, உன்னை அந்த வீரனின் மன மண்டபத்தில் சதிராட அழைப்பு விடுக்கச் செய்த உணர்ச்சிப் பெட்டகங்கள் இந்தக்கோளங்கள். பிரேமையின் விதை நிலம் நாங்கள் தான்" அனல் கக்கியது மார்பகம்.

கண்ணம்மாவுக்கு தலைசுற்றியது. கையிலிருந்த அஞ்சனக் கிண்ணம் கைநழுவிற்று. அழகின் உருவம் அமைப்பது யாரென்று தெரியவில்லை அவளுக்கு! துடித்தாள்! துயர பாரத்தைத் தாங்கும் சக்தி அந்தத் துடியிடைக்கு இல்லை. "இதயககாவலரே இன்னல் தீர்க்கமாட்டீரா? பறந்து செல்லும் பைங்கிளிகளே, பாடி வீட்டில் பயிற்சி செய்யும் என்னவரிடம் கேட்டுவர மாட்டீர்களா?—பொங்கும் அலைகடலே, அழகின் கேந்திரம் எது? என் இன்பராஜாவின் இதயம் அறிந்து வர மாட்டீர்களா?" வாய்விட்டுப் புலம்பினாள் வனிதை. கூக்குரல் கேட்டு சேடி செங்கமலம் ஓடிவந்து சேதி என்னவென்றாள். போராட்டத்தை விளக்கினாள் பொற்கொடியாள்.

"ஓவியம் அழகுபெற ...ணமும் வேண்டும், வகையான தூரிகையும் வேண்டும். ஓ...ன் கைத்திறமை, கருத்தாழம் இவைகளும் அவசியமே! கா...றப்புற புலமையும்தேவை, புதுப்புது முயற்சிகளும் தேவை! எழுத்தாணியும் ஏடுமிருந்தால் எழுத்தோவியம் உருப்பெறுதுகோமகளே!'-செங்கமலம் சொன்னாள்.

"காவியத்தின் சிறப்பையும், ஓவியத்தின் மகிமையையுமா உன்னிடம் கேட்டேன். அழகின் உயிர் எது வென்று கேட்டேனடி அறிவு கெட்டவளே"—எரிந்து விழுந்தாள் எழிலரசி.

"பருவம் ஒருபட்டறை, பக்குவமான காய்ச்சலும், பதமான சம்மட்டி அடியும், நல்ல உலோகமும், கொல்லனின் வியர்வையும் சேர்ந்துதான் அழகாயுதத்தை அடித்துத் தருகின்றன பூவையே"—மீண்டும் விளக்கினாள் செங்கமலம்.

கண்ணம்மாள் திகைத்தாள். கண்ணைத் தேய்த்துக் கொண்டாள். தோழியின் அழகு விளக்கம் தோகை மயில் கோதை உள்ளத்தைத் தொட்டது. சீவிமுடிப்பதற்கு சித்திர முகுரத்தின் முன்நின்றாள். அவளாலேயே அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. களையிழந்து காளிவடிவிலிருந்தாள். கண் மை வழிந்தோடி, கூந்தல் அலங்கோலமாகக் கிடந்தது. கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு பஞ்சணைக்கு ஓடினாள். பாவம்! புடவையின் தோள்மாலை கண்ணாடியில் மோதி கண்ணாடி சாய்ந்தது. மயிர்சிலிர்த்த அந்தக் கிண்ணிக் கோழிப் பெண் கண் விழித்துப் பார்த்தாள். எல்லாம் கனவாயிற்று!

தன்னரசு

---

## விம்முகிறார்கள் . . .

5-ம் பக்க தொடர்ச்சி

நான் எங்கே பத்திரிகை படிக்கிறேன்"

"நீங்களென்ன! பத்திரிகை படிப்பவர்களே — வீம்புக்காக ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்! நேற்றைய செய்தித் தாளில் நிலமிழந்தவர்கள் விடுத்திருக்கும் கண்ணீர் பட்டயத்தை படிக்கிறேன் கேளுங்கள்.

"நிலமிழந்த வன்னியர்களின் குடும்பங்கள் மிகவும் பரிதவிக்கின்றன. பிடுங்கப்பட்ட நிலங்களுக்கு இதுவரை பரிகாரமே செய்யவில்லை. நிலம் பிடுங்கப் பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படும் என மந்திரி சட்ட சபையில் வானளாவப் பேசினார். இதுவரை நஷ்டஈடோ, மாற்று நிலங்களோ தரப்படவில்லையே. மேலும் தியாகி நிலவிதிகளுக்கு முரணாக தியாகிகள் நிலங்களை குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை." போதுமா? வன்னியர் வாழ்வு காக்க மந்திரியான அந்த சீமான் எங்கே இப்போது ? வன்னியகுல மக்கள் விம்முகிறார்கள். ஆனால் அமைச்சரின் விலாசம் தான் தெரியவில்லை.

## பிறைவானம்....

[ 9-ம் பக்க தொடர்ச்சி ]

இருந்தது. 'நகை விஷயத்திலே ஜாக்கிரதையா இருக்கனுமின்னு சொல்றேனே; கேக்கிறியா? இதோ பார், சங்கிலியை உனக்குத் தெரியாமெ கழிட்டியிருக்கிறான் திருட்டிப் பயல்...' என்று கத்திக்கொண்டே சங்கிலியை என் கழுத்தில் போட்டார். கோபம் அடங்கவில்லை; மாடிக்குச் சென்றார்.

என் பயம் அடங்கவேயில்லை. முத்தனை நினைத்தேன். எனக்கு அழுகை வந்தது. 'டக்' கென்று என் பெட்டியிடம் போனேன். திறந்தேன். அதில் ஒரு மூலையில் பம்பாய் பாரிஸ்டர் மாமாவும், அத்தையும் எனக்குத் தந்துவிட்டுப் போன இருபது ரூபாய்கள் இருந்தன. அதை எடுத்துக் கொண்டு மெதுவாக வெளியில் வந்தேன். தெருவில் இறங்கினேன். தெருக் கோடியைப் பார்த்தேன். அங்கே நொண்டி நொண்டி நடந்து கொண்டே முத்தன் போய்க் கொண்டிருந்தான். நான் ஓடினேன். 'முத்தா' என்று கத்தினேன்.

முத்தன் நின்றான்; திரும்பினான். ஐயோ! என் கண்கள் கலங்கின. அவன் உடம்பெல்லாம் காயம்! 'முத்தா !... நீ...'

[ 12-ம் பக்கம் பார்க்க ]

---

## கலைத்தோட்டம் ...

[ 11-ம் பக்க தொடர்ச்சி ]

பிறப்பும் அப்படிப் பட்டதுதான் ...

"வாழ்க்கையை அளந்து விட்டதாகக் களிக்கும் வரட்டு வேதாந்திகளே ! வேண்டாம் அந்த மறைமுகப் பாசாங்கு. அதோ பாருங்கள், இயற்கை சிரிக்கிறது உங்கள் தோல்வியைக் கண்டு"

வாழ்க்கையைக் கண்டுவிட்டதாக உலகை ஏய்த்துந் திரிந்த கெடு மதியாளரைப் பார்ந்து இப்படி வாய்விட்டுச் சிரித்துப் பாடினான் உமார். வாழ்வைப் பற்றி — அதன்பின் மறுமையைப் பற்றி அவன் அன்று கொண்ட கொள்கைதான் இன்றுவரை உலகில் நிலைத்து நிற்கிறது.

ஃ ஃ ஃ

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பாரசீகத்து பாலை நிலத்திலே ஒலித்த அந்த எழுச்சிக் குரலை உளறல் என்றது அன்றைய உலகம்; இன்று பொற்புதையல் என்று போற்றுகிறது ! நெஞ்சத்தில் எழும்பிய எண்ண அலைகளை கருத்தோவியங்களாகத் தீட்டிக் காட்டிய உமார்கய்யாமை அன்று நாடோடி என்றது; இன்றோ 'உண்மைக்கவி' என்று வாழ்த்துகிறது!




# பாலைவனக் குயில்!

வரண்டு கிடக்கும் பாரசீகத்து மணற் பரப்பிலேதான், காதல் சுவையை உலகிற்குப் படைத்த லைலாவும் கயசும் நடை போட்டிருக்கிருர்கள். மரணத்தைத் தழுவிய அந்த உயிர்க் காதலர்களின் அழியா பெரும் காவியத்தைப் பிறப்பித்த பாலை நிலம் உலகத்தின் நன்றிக்குப் பாத்திரமான இடம்.

அந்தப் பெருமைக்குரிய சிறு பூமிதான் உலகத்துக்கு மற்றுமொரு 'கலைப் பெட்டக'த்தைத் தந்து, இலக்கிய ரசிகர்களின் ஏகோபித்த வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுகிறது; புகழ்மாலைகளைச் சூட்டிக் கொள்ளுகிறது. எண்ணை ஊற்றுகளால் உலகத்தில் நல்லிடம் ஒன்றைத் தேடிக் கொண்ட அந்த பூமி, கற்பனையின் பேரூற்றும் — இயற்கையின் லீலா விநோதங்களை, அது ஊட்டும் இன்ப போதையை வார்த்தைகளில் வடித்துக் காட்டிய காவியப் பெரும் புலவனும் -நெஞ்சத்துப் பேராவலை எழுத்துக்களின் வாயிலாகப் பேச வைத்த ஜீவக் கவிஞனும்-உமார் கய்யாமை உலகிற்குத் தந்திருக்கிறது.

''உள்ளத்தை திறந்து காட்டுபவனே கவிஞன். அவன் எதுகை மோனைகளின் அடிமையல்லன். சொல்லிற்கும், யாப்பிற்கும், இலக்கணத்திற்கும் கட்டுப்படாதவன். அவன் அவற்றின் தலைவன். கருத்தின் முதல்வன். ஒரு சிருஷ்டி கர்த்தா. அவனே மகாகவி. எதைப்பற்றியும் தன் கருத்தை தனக்கே உரிய பாணியில் சொல்ல அவனுக்கு உரிமையுண்டு'' என்று சொன்னான் ஆங்கிலக் கவி வால்ட் விட்மன்.

அந்தக் கவிஞனின் இலக்கணத்தைத்தான் — உண்மைக் கவிஞனின் பலமுனைக் கோணங்களைத்தான் 'உண்மை; உண்மை' என்று உமார்கய்யாமின் ஒவ்வொரு எழுத்தும் நாட்டுக்குப் பறைசாற்றுகின்றன.

உண்மைதான்; அவன் பணத்துக்கோ பொருளுக்கோ பாட்டெழுதவில்லை. ஏனெனில் அவன் சிறைப் பறவை இல்லை; இலக்கிய வானிலே தன்னிச்சையாய்-உலகத்தின் சுவையை தன் இதயக் குரலாக்கி பாடிப் பாடி பறந்து திரிந்த வானம் பாடி!

ஃ ஃ ஃ

பிறக்கும்போதே தலையில் மணிமுடி தரித்துத் தோன்றினான் கண்ணன் என்று 'கதை' சொல்லுகிறது நமது புழுதி படிந்த புராணக் கூளங்கள்! ஆனால், உலகில் அறிஞர்கள் என்ற சிறப்பைப் பெற்றவர்கள், பிறக்கும் போதே அத்தகைய பட்டயம் எதையும் ஏற்று வருவதில்லை. அவர்களது தவழும் பருவமும் வாலிப வயதும்கூட குழப்பமற்ற நிலையில், முடிவான ஒரே துறையில் இருப்பதில்லை. காலம்தான் அவர்களைத் தனிப்பாதையில் அழைத்துச் செல்கிறது.

அப்படி காலப்போக்கில் கவிஞனானவன்தான் உமார்கய்யாமும். ஏனெனில் அவனது வாழ்வுத் துவக்கம், அவனை ஒரு கணிதப் பித்தனைத்தான் நமக்கு அறிமுகப் படுத்துகிறது. அவன் கணிதத்தில் தனி மேதையாக — நிகரற்ற நிபுணனாக அக்காலத்தில் இருந்திருக்கிறான். அந்தத் துறையில் அவன் செலுத்திய தனி ஊக்கம்தான் அவனுக்கு உணவூட்டும் ஒரே கருவியாகவும் இருந்திருக்கிறது.

அந்தக் கணிதத் தொழிலிலிருந்து, அவனைக் கவிதை உலகுக்குத் திருப்பியது, பள்ளி செல்லும் வயதிலே தோழர்கள் இருவருடன் அவன் செய்து கொண்ட 'விளையாட்டு ஒப்பந்த'மும், பின்னொருநாள் அந்த ஒப்பந்தம் பலித்ததும், அதன் பலனாக அவனுக்கு பொருள் சேர்ந்ததுமே யாகும்!

உமார்கய்யாமும் அந்தப் பள்ளித் தோழர்கள் இருவரும் ஏழ்மையின் முழு உருவங்கள். எனினும் ஒருநாள் தங்கள் வாழ்வு மலரும் —உப்பரிகையில் உலவும் செல்வர்களாவோம் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டு. அப்படி யாரேனும் ஒருவன் உயர் நிலையை அடைந்தால் மற்ற இருவரையும் போற்றி வர வேண்டும்; நற்பதவி தர வேண்டும் — இதுதான் அந்த குருத்து நெஞ்சங்களின் குருட்டு ஒப்பந்தம்.

ஆனால், காலச்சுழல் அம் மூவரில் ஒருவனை ஒரு மாகாண அதிகாரியின் பீடத்தில் கொண்டு போய் அமர்த்தி விட்டது. ஒப்பந்தம் பழைய கதையாகவோ, பலிக்காத பால்ய நினைவாகவோ ஆகிவிடவில்லை. மற்ற நண்பர்மள் இருவருக்கும் நன்மையைத் தந்தது. உமாருக்கு ஆண்டுதோறும் ஒரு பெரும் தொகையை அனுப்பிவந்தான் அந்த பண்பு மாருத பணக்காரத் தோழன்.

பொருள் தேடிவந்தபின் உமாரின் உள்ளத்தில் எங்கேயோ முடங்கிக் கிடந்த கற்பனை, பெரும் தடைக்கல்லைத் தாண்டி விட்ட நிலையில் புது உரு பெற்றது. மேக மண்டலத்தைப் போல நெஞ்சத்தை சூழ்ந்து கிடந்த கருத்துக் குவியல்கள், பொருள் எனும் சிறுகாற்றுபட்டதும், கவிதை மழையாகப் பொழிந்தன.

மேதாவிகள் என்ற சுய பட்டத்தை முதுகிலே சுமந்து திரிந்தவர்களின் கொள்ளிக் கண்களுக்கு புதுக்கவி உமார் கய்யாம் ஒரு கேலிப் பிண்டமாகத்தான் தோன்றினன். அரச பரம்பரைக்கு ஆலவட்டம் சுற்றியும், மன்னர்குலத்து மாதரசிகளை —அவர்களது மயக்கும் உடலழகை எழுத்துக்களாக அரங்கேற்றி, காணிக்கை படைத்த கூலிக்கவிகள், உமாரின் காவியக் குரலை வாழத் தெரியாதவனின் வேதனைக்குரல் என்று சிரித்துப் போயினர்; கண்ணீர்த் துளிகள் இசைக்கும் கானம் என்று களித்துச் சென்றனர்.

அந்த கேலிக் கூச்சல்களும், கிண்டல் குரல்களும், உமாரின் லட்சியப் பாதையிலே, அவன் அடியெடுத்து வைத்த பெரும் பயணத்தில் பின்னிசைக்கும் இன்னிசையாகவே கேட்டன.

ருபாயத் என்ற நாலடிக் கவிதைகளைத்தான் முதலில் எழுதினன் உமார். பாரசீகத்து பாலைவன நீர்ச்சுனையைவிட — பேரீச்சம் பழத்து இன்சுவையைவிட இனிக்கின்றன அந்தக் கவிதைக் குவியலின் ஒவ்வொரு வரியும்.

ஃ ஃ ஃ

''எதைப் பற்றியும் தன்
கருத்தை தனக்கே உரிய
பாணியில் சொல்ல கவிஞனுக்கு உரிமையுண்டு''

அந்த உரிமையின்பால் கொண்ட விடுபடா பிடிப்பின் காரணமாகத்தான் உமார்கய்யாம் உண்மைக் கவியாகி விட்டான். அவனது உள்ளத்து எழுச்சிகளால் — கையசைவுகளால்—எழுதுகோல் கொட்டிய எழுத்துகள் ஒவ்வொன்றும் தனித் தத்துவத்தை — வாழ்வுக்கு ஒரு சிறப்பு இலக்கணத்தைச் சொல்லுகின்றன.

''நல்லதே செய்யுங்கள்; தவறியும் தீயது புரிந்தால் திக்கெட்டும் தன் அருள் கண்களை வீசிக் கொண்டிருக்கும் ஆண்டவனின் கோபம் உங்களைச் சுட்டெறிக்கும்'' என்று வாதிட்டு, ஆண்டவனைக் காப்பாற்றி வந்த தூதுவர்களின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி பதம் பாடவில்லை அவன். மாருக கண்டித்தான், கிண்டலின் மூலம்.

''ஆண்டவன்தான் உலகைப்
படைத்தான் என்கிறீர்களே,
நன்மையும் தீமையும்
சேர்ந்து வாழும் இடமாக
நம்மை உண்டாக்கியவனும்
அவன்தானே! அத்தகை
யோன் தீமைகளுக்காக மட்
டும் நம்மைத் தண்டிப்பா
னேன்? சுட்டெறிப்பா
னேன்? இன்னமுதம் ஏந்தி
உண்ட கலத்தை மோதி
உடைக்கும் மூடன் உண்டா?
சொல்லுங்கள்; இதுதான்
உங்கள் நாயகனின் அருட்
பண்பா?...நன்று!...நன்று!''

என்று கேட்கிறான். வாழ்க்கையை ஆராய்வதாக நேரத்தைக் கழிப்பேரைக் கண்டு உமார் சிரிக்கிறன்.

''மரணம் பெரும் ரகசியம்!
அதற்குப் பிறகு மறுமை
உண்டா? மீண்டும் வாழ்வு
உண்டா? ... இது ஒரு சிரிப்
பூட்டும் வாதம்...

''அரும்பு மலராகிறது. அதற்கு
ஒரு நாள் வாழ்வுதான். மறு
நாள் மடிகிறது; துவண்டு
விழுகிறது; மணமிழந்து,
கண்முன்னே கசங்கிச்
சுருண்ட அந்த மலர், மீண்
டும் மலர முடியுமா? மறு

(10-ம் பக்கம்)

## இரு யோசனைகள்!

★

சினிமாத் துறையிலே காங்கிரஸ் சர்க்கார் எவ்வளவு நாட்டம் செலுத்தி வருகிறது என்பதற்குசர்க்காரின் நடைமுறை செயல்கள் சான்று கூறும். சிறந்த படங்களுக்கு பரிசுகள் வழங்க இந்தியசர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். சர்க்கார் இப்பேர்ப்பட்ட பணியில் ஈடுபடுவது உலகிலேயே இதுதான் முதல் முறை என்றும் பறை சாற்றப் படுகிறது. கலைவளர வேண்டும் என்ற நல்ல நோக்குடன் சர்க்கார் இந்த பணியைச் செய்ய முன் வந்திருந்தால் நாம் மகிழ்கிறோம். ஆனால் 'கலை,கலைக்காகத்தான், நிலவு குளிரொளி வீசுவது நிலவுக்காகத்தான்' என்றகுருட்டு வேதாந்தத்தை சர்க்காரும் கடைப் பிடித்து, ஏடு எதிர் நீச்சல் போடுதல், முதலையுண்ட பாலகன் மீண்டும் உயிர்பெற்று எழுதல் போன்ற கற்பனைக்கும் பொருந்தாத கதைகளை பாராட்டுமானல் நமது கண்டனக்கணைகளின் குறி தவறாது என்பது முன் கூட்டியே எச்சரித்து விடுகிறோம்.

கலை— காலத்தோடு சேர்த்து வளர்க்கப்பட வேண்டும் — இந்த உண்மையை மறுத்த கெய்சர் வாழ்வின் இறுதிக் காலத்தில் பட்ட பாட்டையும் மறந்து விடக்கூடாது.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்லி விடுகிறோம். படங்கள் தயாரிப்பது ஒரு மொழியில் மட்டுமல்ல என்பதை சர்க்கார் மறந்து விட்டது. அந்தந்த மொழிக்குடையோர் அவரவர்களின் மொழி, நாகரீகத்திற் கேற்றார் போலத்தான் படமெடுப்பார்கள். சர்க்காரின் தீர்மானப்படி ஒருமொழிப் படத்திற்கு மட்டும் பரிசு தருவதாக இருந்தால் அந்தத் தீர்ப்பின்படி பரிசு பெற்ற படம்தான் சிறந்த படம் என்று சொல்லுவதற்கில்லை. எனவே ஒவ்வொரு மொழிப் படத்திற்கும் ஒவ்வொரு பரிசு தரப்பட வேண்டிய தவசியம் என்பதை சர்க்காருக்கு இப்போதே தெரியப் படுத்திக் கொள்கிறோம்.

எமது புதிய வெளியீடு

அறிஞர் அண்ணதுரை எம். ஏ.

அவர்களின்

**கலிங்கராணி**

விலை ரூ. 3-0-0

திராவிடப்பண்ணை

தெப்பகுளம் : : திருச்சி

# கடைசிப்பக்கம்

ஏ. எஸ். ராமன்; சென்னை

(?) தோழர் அரங்கண்ணல் திருமணத்தின்போது தாலிகட்டப் பட்டதுண்டா?

இல்லை... இல்லை... இல்லை......!

(?) தடைகள் பல இருக்கும் போது தமிழ் எப்படி ஆட்சி மொழி ஆகமுடியும் என்று காங்கிரஸ் காரர்கள் கேட்கிறார்களே; அதுபற்றி தங்கள் கருத்தென்ன?

தடைகள் பல இருந்தமைக்காக வெள்ளைக்காரனை எதிர்க்காமலா இருக்க முடிந்தது? தடைகளை எதிர்த்து நிற்க தைரியமில்லாதவர்கள் ஆட்சி பீடம் ஏறியிருக்க வேண்டிய அவசியமே இல்லை, தோழரே!

கந்தசாமி; போடிய நாயக்கனூர்.

(?) எங்களூர் பிரமுகர் ஒருவர் கழகக் கொடிகளை கிழித் தெறிவதிலே கவனமாக இருக்கிறார்; இதற்கு எனனசோல்வது?

கொடியைக் 'கிழிப்பதைச் சொல்ல வந்துவிட்டீரே; எங்கள் தெருமுனையில் ஒருவர், தான் அணிந்து கொண்டிருக்கும் சட்டை, வேட்டிகளையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டு பிதற்றிக் கொண்டிருக்கிறார். இந்த ரகத்தைச் சேர்ந்த ஆசாமிகள் ஆஸ்பத்திரிக்கு அகப்படாமல் ஊருக்கு ஒருவர் வீதம் இருப்பார்களோ என்னவோ!

(?) பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் டாக்டர் லோகியோ மட்டும் நல்லவர் போல் தோன்றுகிறாரே; இது ஏன்?

சில ஓட்டல்களில் 'சர்வர்களை' விட மேஜை துடைப்பவர்கள் சுத்தமாக இருப்பதில்லையா; அதைப் போலத்தான், பாசிச காங்கிரசின் இரண்டாவது பதிப்பாகக் காட்சிதரும் பிரஜா கட்சியில் டாக்டர் லோகியோ ஜனநாயக மணம் பரப்ப முயற்சிக்கிறார். பாவம்; பயனற்ற முயற்சி!

(?) மகான் காந்தியாரின் உயிரைக் காக்க தன் உயிரைக் கொடுத்த தில்லையாடி வள்ளியம்மைக்கு இந்தியாவில் ஏதாவது ஞாபகச் சிலைகள் உண்டா?

இல்லை, நண்பரே! காந்தியாரின் பாதரட்சைகள்கூட கண்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் அவருடைய உயிர்காத்த வள்ளியம்மையின் பெயரோ இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது. என்ன செய்வது; வள்ளியம்மை வடநாட்டில் பிறக்கவில்லையே!

---

[ 7-ம் பக்கத் தொடர்ச்சி ]

எண்ண மெல்லாம், பரிமளாவிடம், அந்த ரகசியத்தை எப்படி விசாரிக்கலாம் என்பதிலேயே மூழ்கி யிருந்தது. முதல் நாள் இரவு கோயிலில் கண்ட காட்சிகள் அனைத்தும் அவர் மனக் கண்ணில் நிழலாட்டம் போட்டன. இருவரும், ஊர்ப்பக்கம் திரும்பினார்கள்; ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளாகவே ஒவ்வொரு பயங்கர முடிவை செய்து கொண்டு!

[ வளரும் ]

புதிய உருவில் வெளிவரும்

**கலைமன்றம் இதழிலே....**

அக்டோபர் 9-ந்தேதி முதல்

கோவி. மணிசேகரன் எழுதும்

**அக்கினிக் கோபம்**

சரித்திரத் தொடர்கதை ஆரம்பமாகிறது.
உடனே சந்தாதாரராய் சேருங்கள்.

★ விபரங்களுக்கு ★

கலைமன்றம் — ( திராவிடர் முற்போக்கு வார இதழ் )
சென்னை-1.
தபால் பெட்டி நெ. 275.

## பிறைவானம் ...

[ 10-ம் பக்க தொடர்ச்சி]

என்று பேச ஆரம்பித்தேன். தொண்டை அடைத்தது. அழுதேன். 'இனிமே...வீட்டுக்கு வராதே! ...' என்றேன், அழுது கொண்டே! கையிலிருந்த 20 ரூபாயை அவன் கையில் வைத்தேன்.

'ஐயையோ வேண்டாம் தம்பி' என்று பயந்து கொண்டே சொன்னான் முத்தன். பணத்தை என்னிடம் நீட்டினான். நான் வாங்கிக் கொள்ளவில்லை. 'முத்தா! நீ எடுத்துக்காட்டிப் போனு, நான் வீட்டுக்குப் போக மாட்டேன்! நானும் இந்தப் பக்கமா எங்காவது போயிடுவேன்...சீக்கிரம் போ முத்தா! அப்பா பார்த்துடப் போறாங்க......' என்றேன். வீட்டை நோக்கி திரும்பி ஓடினேன்; வாசலுக்கு வந்தேன். திரும்பிப் பார்த்தேன். முத்தன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான். நான் 'போ' என்ற பாவனையில் கையை ஆட்டினேன். வீட்டிற்குள் நுழைந்தேன்.

மாடியில் குரல் கேட்டது. 'முத்தனை போகச் சொல்லிட்டீங்களா?...'-அம்மாவின் குரல் இது.

அப்பா பதில் சொன்னார்: 'கழுதை தொலையட்டுமே! நமக்கென்ன வந்தது? அதது தலைவிதிப்படி தானே நடக்கும்?'

'பாவம்! முத்தனும் அவன் விதியும்' — என்று எண்ணிக் கொண்டே நான் அப்படியே உட்கார்ந்து விட்டேன்.

நாட்கள் சென்றன. முத்தன் ஞாபகம் எனக்கு அடிக்கடி வந்தது. 'பாவம்! அவன் எங்கேயிருக்கிறானோ? என்னென்ன கஷ்டப் படுகிறானோ?' இப்படி எல்லாம் எண்ணினேன். வருந்தினேன்.

இதெல்லாம் இரண்டுவருஷங்களுக்கு முன்னே நடந்தது. ஆனால், நேற்று நடந்தசம்பவம் தான் மிகமிக முக்கியமானது!

நான் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். வாசலில் 'டக்' கென்று வந்து நின்றது டாக்ஸிஒன்று. எனக்கு மகிழ்ச்சி! சரிதான் — மாமா வந்திருக்கிறார் என்று எண்ணினேன். துள்ளிக் குதித்து எழுந்தேன். வண்டியிலிருந்து இறங்கியவரை கவனித்தேன். யாரது? நான் மாமாவை எதிர் பார்த்தேன். ஆனால் என்னைவிட வயதான, எனக்கு அண்ணன் போன்ற பையனல்லவா இறங்குகிறான்! ஆ! நான் புரிந்து கொண்டேன். 'முத்தா' என்றேன். முத்தன் என்னை தாவி எடுத்துக் கொண்டான். நான் முத்தனின் சில்க் சட்டையைப் பார்த்தேன்; கடிகாரத்தை, மோதிரத்தை எல்லாம் பார்த்தேன்! 'இதெல்லாம் என்ன முத்தா?' என்று கேட்டேன்.

'என்னவா? என் விதியை நீ மாற்றினாய் அல்லவா? அதன் பலன்...' என்றான்

இதற்குள் அப்பாவும் அம்மாவும் வெளியே வந்து விட்டார்கள். திகைத்தார்கள். முத்தன் கதையைச் சொன்னான்.

நான் அன்று இருபது ரூபாய் தந்தேனல்லவா, அதை எடுத்துக்கொண்டு முத்தன் திருச்சிக்குப் போனானும். அதைக் கொண்டு வீதியிலே வெற்றிலை பாக்கு விற்றானும். ரொம்பவும் சிக்கனமாகஇருந்தானும். பிறகு ஒரு கடை வைத்தானும். லாபம் சேரச் சேர தனியாக புகையிலை வியாபாரம் செய்தானும். பணம் குவிந்ததாம். இப்போது எங்கும் பிரபலமாயிருக்கும் 'மோகன் விலாஸ்' புகையிலை கம்பெனி அவனுடையது தானும்!

கதையைக் கேட்டதும் நான் மூக்கில் விரலை வைத்தேன். அப்பா ஆச்சரியப்பட்டார். இப்போது சொல்லுங்கள் சார், என்னால்தானே முத்தன் முதலாளியாக முடிந்தது? நான் தானே அவனுடைய விதியை எதிர்த்தேன்; வென்றேன்?" என்று சொல்லிக் கொண்டே பையன் எழுந்தான்.

'போகிறாயா?' என்றேன்.

'ஆமாம் சார்! நான் உடனே ஒரு இடத்திற்கு போக வேண்டும். மோகன் விலாஸ் புகையிலை கம்பெனியின் சென்னைக் கிளை நிலையத்தை என் அப்பா திறந்து வைக்கிறார்...நாழிகையாகி விட்டது. நான் வரட்டுமா?' என்றான். என் விடைக்குக்காத்திருக்காமலேயே நடந்தான்.

நான் முத்தனின் விதியை நினைத்தேன். அதை மாற்றிய சுட்டிப் பயல் மோகனை நினைத்தேன். சிரிப்பு வந்தது.

—சொர்ணம்

... வெளியிடப்படுகிறது. அலுவலகம்: